Vaidika Pandit Sri V Harihara Collection, Sholinganallur Chennai



CC-0 In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சீபுரம்

முகாம் :
திருச்சி-2

தேதி
18-10-77

ஸ்ரீமுகம்

பகவான் ஞான தீபமாகப் பிரகாசிக்கிறார். வழிபாட்டு முறையிலே ஜோதி வடிவத்திலே இறைவனை வழிபடுவதும் ஒரு முறையாக இருக்கிறது.

பெரிய புராணத்தில் கலிய நாயனார் பகவானுக்குத் தீப கைங்கரியம் செய்து அவர் அருளைப் பெற்றார். நரகாசுரனுடைய தாயார் கண்ணபிரானிடம் நரகாசுரன் மறைந்த தினத்தன்று, உலகமெங்கும் ஒளிமயமாக, தீப மயமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தாள்.

நமது வாழ்க்கையில் நாம் பல விஷயங்களைத் தெரியாமல் செய்துக்கொண்டிருக்கிறோம். ஸ்ரீ நடராஜன் என்ற 'நஜன்' ஞான ஒளி பரப்பும் பல நூல்களை இயற்றியிருக்கிறார். தீபாவளியை முன்னிட்டு "தீப தரிசனம்" எனும் நூலை வெளியிடுவதை அறிந்து சந்தோஷிக்கிறோம்.

இது போல் பல நூல்கள் வெளிவந்து எல்லா மக்களும் நல்ல நூல்களை நிறைய படித்து ஞான தீபத்தை ஏற்றிக்கொள்ள வேண்டும். எல்லோருடைய புத்தியிலும் ஞான ஒளி பிரகாசிக்கட்டும்.

நாராயண ஸ்மிருதி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

முகவுரை

தவத்திரு ஷண்முக சைதன்ய் சுவாமிகள்,
ரிஷிகேசம்.

ஜோதிர் மயமான இறைவன் அண்டத்தில் மட்டுமின்றி பிண்டத்திலும் (இம் மனித உடலிலும்) சுடர் விட்டுப் பிரகாசிக் கிறார். இதைத்தான் ''தஸ்ய மத்யே வஹ்னி சிகா அநியோர்த்வா'' என்ற வேத வாக்கியம் குறிப்பிடுகிறது. சுட்டை விரல் பிரமாணத்தில் தீப ஜோதியாக பிரும்மம் இருதயத்தில் விளங்கு கிறது என்பது இதன் அர்த்தம்.

எங்கும் ஜோதிர் மயமாக விளங்கும் இறைவனை நிபத்தில் ஆவாஹனம் செய்து வழிபடுவது வெளிப்படையான (பாஹ்ய) பூஜையுடன் ஆத்ம பூஜையாகவும் விளங்குகிறது. தெய்வ வழிபாட்டுக்கு தீபம் ஒன்றே போதும். இறைவனை ஆராதிக்க இது மிகவும் சுலபமான வழி.

தீபங்களில்தான் எத்தனை தத்துவங்கள். இவைகளை எல்லாம் மிக அருமையாகத் திரட்டி அழகாக விளக்கியிருக்கிறார் 'நஜன்'.

சின்னஞ்சிறு வயதிலேயே எனது குருநாதர் ஸ்ரீ சிவானந்தரின் அருளையும் உபதேசத்தையும் பெற்றவர் 'நஜன்'. எல்லோரும் குருவைத்தேடி அலைவர். பால் மணம் மாறு பருவத்தில் குருநாதரே இவரை அழைத்து மிக அருமையான ''Adopt, Adjust· Accomodate'' என்ற இகத்திற்கும் பரத்திற்கும் ஏற்ற மந்திரத்தை உபதேசித்து இருக்கும்போது நஜன் இந்த அரிய பெரிய தத்துவங்களை இவ்வளவு எளிதாகவும் தெளிவாகவும் விளக்குவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

இந்த அரிய தொண்டு நீடித்து 'நஜன்' எல்லா நலன்களைப் பெறவும் அவரது புஸ்தகங்கள் சேது முதல் இமயம் வரை பரவி எல்லோராலும் படிக்கப்பட வேண்டும் என்று நான் வழிபடும் முருகபிரானிடம் பிரார்த்திக்கிறேன். எல்லோர் மனதிலும் தீப (ஞான) ஒளி பிரகாசித்துப் பயனடைவார்களாக.

சுவாமி சிவானந்தா ஆஸ்ரமம்
ரிஷிகேசம்
23—10—1977

ஷண்முக சைதன்யர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த சுவாமிகள்

புவனேஸ்வரி அதிஷ்டானம்,



முகாம் :
புதுக்கோட்டை

தேதி
17-10-77

ஸ்ரீமுகம்

இறைவன் ஆதி அந்தமில்லாத முழு முதற் பொருளான ஜோதிமயமானவன். உலகில் காணப்படும் ஒளிகள் அனைத்தும் இறைவனின் திருவுருவமே யாதலால் கடவுளை 'ஜோதியே' என்று போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

தீபாவளியாகிய நன்னாளில் நமது அகத்துள் இறைவனின் அருளொளி மின்ன வேண்டும் என்பதற்காகவே தீபாவளிப் பண்டிகை பாரத தேசம் எங்கும் கொண்டாடுகிறோம். இப்புனித பண்டிகையை யொட்டி நமது நடராஜன் என்கிற ''நஜன்'' ''தீப தரிசனம்'' என்ற நூலை எழுதி வெளியிடுவது மிகவும் போற்றத்தக்க பணியாகும்.

ஆஸ்திகோத்தமர்களுக்காகவே விளக்கு பூஜை பற்றிய அரிய விஷயங்களையும் தீப கைங்கர்யம் செய்த அடியார்கள் வாழ்க்கை விவரம் இவை எல்லாவற்றையும் சிரமப்பட்டு சேகரித்துக் கொடுத்திருக்கிறார்.

இத்தகைய நூல்களை அவர் மேலும் வெளியிட்டுக்கொண்டு சிரஞ்சீவியாக இருந்துவர வேண்டும் என்று ஸ்ரீ சத்குரு சுவாமிகள் ஆசீர்வதித்து அனுக்கிரஹித்துள்ளார்கள்.

ஸ்ரீமத் சத்குரு சாந்தானந்த சுவாமிகள்
ஆக்ஞைப்படி.
சுந்தரம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



அன்பே சிவம்!

பிரதிபா வெளியீடுகள்

மக்கள் உய்வதற்கான "ஞான" அளிக்கும் தெய்வீகக் கனிகள் அவையாவன:-

தீப தரிசனம்
ஸ்ரீ நவ துர்க்கா
வினை தீர்க்கும் விநாயகர்
பாராயண மாலா
வாழ்க்கைத் தத்துவங்கள்
ஏழுமலை ஆண்டவன்
உலக மகா உத்தமர்கள்
தேவி புவனேஸ்வரி
ஸ்ரீசக்ர நாயகிகள்
ஏன் பள்ளி கொண்டீர்?
முருக தரிசனம்
குரு தத்துவம்
துர்க்கா பரமேஸ்வரி
ஜகன்மாதா லலிதா
மூக பஞ்ச சதி
தமிழர் பண்டிகைகளும் பண்பாடும்
பாவை உணர்த்தும் தத்துவங்கள்
லக்ஷ்மி கடாக்ஷம்
சுவாமியே சரணம் ஐயப்பா
கருணை காமாட்சி
அன்னை பராசக்தி
வாக்தேவி வைபவம்
கண்கண்ட தெய்வம் கருமாரி

மற்றும் அடுத்தடுத்து வெளிவரும் புத்தகங்களனைத்தும் சிங்கப்பூரில் கிடைக்குமிடம்:-

கலைமகள் புத்தக நிலையம்

113, சிராங்கூன் சாலை, சிங்கப்பூர்-8
தொலைபேசி எண் : 2932921

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீப ஜோதியாய் வருவாய்

ராகம் : ஆரபி

1. தீப ஜோதியாய் வருவாய்
திருமகளே பொருள்
தருமகளே—நீ

(தீப)

2. உனதருள் உளதேய
உலகாம்—இன்றேல்
உலக வாழ்வு கொடும் நரகாம்
தன தான்ய ஸௌபாக்யம் தருவாய்
—திருமகளே.

3. பாற்கடலில் உதித்த பொற்கொடியே உந்தன்
பார்வை பெற்றவர்க்கு எதுவும் எளிதாம்
சேர்த்த பின் பயனுறும் செல்வமும் தருவாய்—திருமகளே

4. வீரத்திருமகளின் நோக்கம்—எல்லா
வெற்றி அளிக்கும் மன ஊக்கம்
சீரும் சிறப்பும் மனத்திறமையும் தருவாய்—திருமகளே

5. செந்தாமரை வளர் ஒளியே—ஐயன்
திருமார்பினுள மணியே
எந்தாய் நினதருள் வாழ்க வாழ்க நீ—திருமகளே

6. கமல நயனமிகும் கருணை—உந்தன்
கவிகள் பாடும் அருள்புரிவாய்
வமிச முழுதும் எனக்கருள்வரம் தருவாய்—திருமகளே

7. தோகை நினதருளின் துணையால் நான்
தொட்ட தனைத்தும் பயனளிக்கும்
யோக போக சுக வாழ்க்கையும் தருவாய்—திருமகளே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீப பூஜைக்குரிய தேவதைகள்

சப்தசதி தீப பூஜையில்

தேவி மகாத்மியத்தில் (சப்தசதி) பதின்மூன்று அத்யாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்யாயத்திற்கும் தேவதைகள் உண்டு. இவர் களைக் குறித்தே 13 அகல் விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

அத்யாயம்.	தேவதை
1.	வாக்பவ பீஜாதிஷ்டாத்ரீ மஹா காளி.
2.	லக்ஷ்மீ பீஜாதிஷ்டாத்ரீ மஹா லக்ஷ்மி.
3.	அஷ்டாவிம்சதி வர்ணாத்மிகா.
4.	த்ரி வர்ணாத்மிகா சக்தி லக்ஷ்மி
5.	விஷ்ணுமாயா, சேதனா, புத்தி தேவி, நித்ரா, க்ஷுதா, சாயா, சக்தி, திருஷ்ணா, க்ஷாந்தி, ஜாதி, லஜ்ஜா, சாந்தி, சிரத்தா, காந்தி, லக்ஷ்மி, விருத்தி, ஸ்மிருதி, தயா, துஷ்டி, மாத்ரு, பிராந்தி, வ்யாப்தி, சிதி தேவிகள் (ஆக 23 தேவதைகள்).
6.	சதாக்ஷி துர்காக்ஷி.
7.	கர்ப்பூர பீஜாதிஷ்டாத்ரீ காளி சாண்முடா.
8.	அஷ்டமாத்ரு ஸம்ஹிதா ரக்தாக்ஷி.
9.	வாக்பவ பீஜாஷ்டாத்ரி மஹா காளி.
10.	ஸிம்மவாகனா த்ரிசூலதாரிணி.
11.	ஸர்வ நாராயணீ.
12.	பாலா திரிபுர சுந்தரி.
13.	திரிபுர சுந்தரி ஸ்ரீ வித்யா.

திதி நித்யா, ஷோடச லக்ஷ்மி தீப பூஜையில்

16 திதி நித்யைகள்*		16 லக்ஷ்மிகள்*
1. காமேஸ்வரி	—	ஆதி லக்ஷ்மி
2. பகமாலினி	—	சௌந்தரிய லக்ஷ்மி
3. நித்யக்லின்னா	—	சௌபாக்ய லக்ஷ்மி
4. பேருண்டா	—	கீர்த்தி லக்ஷ்மி
5. வஹ்னிவாஸினி	—	வீர லக்ஷ்மி
6. மகா வஜ்ரேஸ்வரி	—	ஜெய லக்ஷ்மி
7. சிவதூதி	—	கந்தான லக்ஷ்மி
8. த்வரிதா	—	மேதா லக்ஷ்மி
9. குலசுந்தரி	—	வித்யா லக்ஷ்மி
10. நித்யா	—	துஷ்டி லக்ஷ்மி
11. நீலபதாகா	—	புஷ்டி லக்ஷ்மி
12. விஜயா	—	ஞான லக்ஷ்மி
13. சர்வ மங்களா	—	சக்தி லக்ஷ்மி
14. ஜ்வாலா மாலினி	—	சாந்தி லக்ஷ்மி
15. சித்ரா	—	ராஜ்ய லக்ஷ்மி
16. லலிதா மகா நித்யா	—	ஆரோக்ய லக்ஷ்மி

* திதி நித்யைகள் பற்றிய முழு விவரங்களை 'அன்னை பராசக்தி' 'ஸ்ரீசக்ர நாயகிகள்' புத்தகங்களிலும் ஷோடச லக்ஷ்மி விவரங்களை "லக்ஷ்மி கடாக்ஷம்" புத்தகத்திலும் காணலாம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீப தரிசனம் 1

விளக் கொளியாகிய மின் கொடியாளே
விளக் கொளியாக விளங்கிடு நீயே
விளங்கிடு மெய் நின்ற ஞானப் பொருளே
விளங்கிடுவார்கள் விளக்கினர் தானே

—திருமூலர் (திருமந்திரம்)

விளக்கு வெளிச்சம் இருந்தால் இருள் அகலுகிறது. அறிவு என்ற விளக்கொளி முன்பு அறியாமை அகல்கிறது. ஆதிகாலம் முதற்கொண்டே ஒளியையும் ஒளி தரும் பொருள்களையும் நற்குணங்களைக் குறிக்கும் சின்னங்களாக மக்கள் மதித்து வந்திருக்கின்றனர்.

ஞானமும் ஒளிதான். ஒருவருடைய ஞானம் எல்லோரும் கண்டு உணரும்படியாக இருக்க வேண்டும். ஒளி வெளிச்சம் மட்டுமா தருகிறது? சுற்றுப்புறப் பொருள்களை எல்லாம் பிரகாசிக்கவும் செய்கிறது. இதனால்தான் ஒளியைக் கல்வியுடன் ஒப்பிட்டிருக்கிறார்கள். அறியாமை என்ற இருளைப் போக்கி அறிவு என்ற வெளிச்சத்தைத் தருவது கல்விதானே.

வெளிச்சம் தேவைப்பட்டால் விளக்கு, திரி, எண்ணெய் இவைகளுடன் பற்றலும் எரிதலும் வேண்டும். பகவத் தியானம் என்கிற எண்ணெய் அவசியம். அந்த தியானம் எண்ணெயை ஊற்றினால் கம்பி மாதிரி தொடர்ந்து விழுவதுபோல இந்த பகவத் தியானம் தொடர்ந்து இருக்க வேண்டும். மனதையும் ஐம்புலன்களையும் அடக்கி "நான்" என்னும் அகந்தை, ஆசைகள் எல்லாம் எரிந்து பஸ்மமாக வேண்டும்.

நாம் ஏன் பிறந்தோம்? எங்கிருந்து வந்தோம்? வாழ்க்கை லட்சியம் என்ன? எங்கு போகப் போகிறோம். இவை எல்லாம் தன்னுள்ளே "விளக்க" வேண்டும். மூச்சு உள்ளபோதே இறைவனைப் பணிந்து நல்ல மகான்களைத் தேடி, நல்லவர்களை நாடி 'திரிய' வேண்டும். நல்ல விஷயங்களை படித்து, கேட்டு, அறிந்து 'எண்ண' வேண்டும். பகவானைக் காட்டிக் கொடுக்கும் குருநாதனைப் 'பற்ற'* வேண்டும்.

---

*எப்படி பற்ற வைப்பது? மரத்தில் தீயுண்டு என்பதை முதலில் கண்டுபிடித்தார்கள். மூங்கில்கள் ஒன்றோடொன்று உரசினால் தீப்பிடிக்கும். வன்னிமர (அரணி)க்கட்டையில் இம்மாதிரி தீ இருக்கிறது. அக்கட்டையில் குழியிட்டு அக்குழியில் மற்றொரு கோலை வைத்துக் கடைந்து நெருப்பை உண்டு பண்ணினர். யாகங்கள் செய்ய நெருப்பு இம்மாதிரி கடைந்தே உண்டாக்க வேண்டும். இதனால் நெருப்புக்கு ஞெலிதி என்று பெயர். அதாவது கடைந்து கிடைக்கப்பெற்ற நெருப்பு என்று அர்த்தம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொய்கையார் ஸ்தூலமாக கண்ணில் காணும் பொருள்களைக் கொண்டு விளக்கு ஏற்ற பூதத்தாழ்வார் சூக்ஷமப் பொருள்களைக் கொண்டு ஞான விளக்கு ஏற்றுகிறார். இவ்விருவர் ஏற்றிய ஜோதியைக் கொண்டு பேயாழ்வார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்

என்று பரமாத்மாவை தரிசிக்கிறார். தீப தரிசனமே தெய்வ தரிசனமாகிறது.

"பயிலும் சுடர் ஒளி மூர்த்தி பங்கயக் கண்ணன்" என்று நாரணன் நற்சுடரொளியாய் நந்தா விளக்காக ஒளிரும் அற்புதக் கோலத்தை நம்மாழ்வார் சுட்டிக் காட்டுகிறார்.

அறிவு என்பதை "உணர்வெனும் சுடர்விளக்கு", "ஞானச் சுடர் விளக்கு", "ஒளிகொள் விளக்கு" என்றெல்லாம் மகான்கள் வருணித்திருக்கிறார்கள். அறிவு என்கிறபோது சாதாரண அனுபவத்தில் பெறும் அறிவு, நூல்கள் வாயிலாகப் பெறும் தத்துவ ஞானம் என்று பல வகைப்படும். நம் அனுபத்திற்கும் யுக்திக்கும் பொருத்தமான நூல்களின் வாயிலாகப் பெறும் அறிவையே பேரறிவாக மதித்தனர் பெரியோர். அத்தகைய அறிவை "வேத விளக்கு" என்று போற்றினார்கள்.

விளக்கு புகுந்த விடத்தில் இருள் நீங்குவதுபோல ஒருவன் தவத்தைக் கொண்டு பாவம் விலகுகிறதாம். விளக்கில் எண்ணெய் தீர்ந்து போகும்போது அது அணைந்து விடுவதுபோல தவம் இல்லாதபோது நல்வினை தேய்ந்து, தீமை தலை தூக்குகிறது, என்பதை பின்வரும் நாலடியார் பாடல் விளக்குகிறது.

விளக்குப்புக இருள் மாய்ந்தாங்கு ஒருவன்
தவத்தின் முன் நில்லாதாம்—பாவம்
விளக்கு நெய் தோய் விடத்து
சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாம் தீது.

இவ்வுலகின் இருள் நீக்க வந்த கண்ணனை "வேதாந்த விழுப் பொருளின் மேலிருந்த விளக்கு" என்றே புகழ்ந்திருக்கிறார்கள் ஆழ்வார்கள்.

தீபமே அம்பிகை

அம்பிகை தீப வடிவாகவே இருக்கிறாள். அவளைப் பூஜிக்கும் போது தீபத்தில் ஆவாஹனம் செய்து பூஜிப்பது மிகவும் விசேஷம். அப்படி தீபத்தில் அம்பிகையை ஆவாஹனம் செய்யும்போது சாக்ஷி தீபம் என்று மற்றொரு தீபம் இருக்க வேண்டும். குத்து விளக்குகளே லக்ஷ்மி ஸ்வரூபம். இரவில் குத்து விளக்கை அணைக்கு முன் அதற்கு பால் தொட்டு வைத்து பின்னரே அணைப்பது வழக்கம். எந்த தெய்வ வழிபாடும் குத்துவிளக்கு இல்லாமல் செய்வதில்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குத்து விளக்கு திரிமூர்த்தி ஸ்வரூபம் எனவும் கூறப்படுகிறது. ஆசனமாகிய அடிப்பாகம் பிரும்ம ஸ்வரூபம். நெடிய தண்டாகிய மத்ய பாகம் விஷ்ணு. நெய் ஏந்தும் அகல் பகுதி சிவன். அதற்கு மேலுள்ள பகுதி மகேஸ்வரன். சிகரமாக உள்ள உச்சிப் பகுதி சதாசிவன்.

நெய்-நாதம்; திரி-பிந்து; சுடர்-திருமகள்; தீப்பிழம்பு-கலைமகள்; தீ-சக்தி.

இந்த விளக்கு நம் உடலிலும் இருக்கிறது. அடிப்பாகம் நாபிக்குக் கீழுள்ள மூலாதாரம். மேல் நோக்கி ஓடும் சுஷும்ணா நாடியே விளக்கின் தண்டு. சுழுத்துக்கு மேற்பட்ட பகுதியே குத்துவிளக்கின் தலைப்பாகம். புருவ மத்தியில் ஜோதி ஜ்வலிப்பதே குத்துவிளக்கின் ஜ்வாலை. ஆத்ம ஜோதியை வணங்குவதே தீப பூஜையின் தத்துவம்.

நாகரிகத்தின் முதல் சின்னம் விளக்கு. நெருப்பை அரணிக் கட்டையிலிருந்து கண்டுபிடித்த ஆதி மனிதன் குழிகளில் கொழுப்பை விட்டு விளக்கு ஏற்றும் முறையை அறிந்தான். மலைகள் உள்ள குறிஞ்சி நில மக்கள் குழி விழுந்த கற்களை விளக்காக உபயோகிக்க ஆரம்பித்தார்கள். முல்லை நில மக்கள் கற்களைக் கொண்டு விளக்குகள் செய்யலானார்கள். மாக்கல் விளக்கு இவர்கள் செய்ய ஆரம்பித்தது தான். மருத நிலம் தோன்றிய காலத்தில்தான் மக்களின் நாகரிகம் தளிர்க்க ஆரம்பித்தது. சுடுமண்ணால் செய்யப்பட்ட அகல் விளக்குகளும் உலோகத்தால் செய்த விளக்குகளும் மருத நிலத்தில் தான் முதலில் தோன்றின.

தமிழர்கள் விளக்கையே தெய்வமாகக் கொண்டனர்; இருட்டில் எந்த காரியத்தையும் செய்யக் கூடாதென்பது தமிழர்களின் கொள்கை. எட்டு மங்கலப் பொருள்களில் ஒன்றாக விளக்கையும் சேர்த்தார்கள். ஆலயங்களில் பாவை விளக்குகளைக் காணலாம். தீப நாச்சியார் என்றும் அழைப்பதுண்டு. சங்க நூல்களில் இந்த பாவை விளக்குப் பற்றி விவரங்கள் காணப் படுகின்றன.

திருமணமாகிப் புதுக் குடித்தனம் செய்யப்போகும் பெண்ணுக்கு அளிக்கும் சீர் வரிசைகளில் குத்து விளக்கு முதலிடம் பெறுகிறது. சில திருமணச் சடங்குகளில் ஏற்றி வைத்த குத்து விளக்கை மணமக்கள் வலம் வருவதுமுண்டு. ஊஞ்சலில் மணமக்கள், மனமகிழ உட்கார வைத்து தீபத்தை எடுத்துக் கொண்டு சுமங்கலிகள் சுற்றிவருவதைக் கவனித்திருக்கலாம்.

தமிழ்நாட்டு விளக்குகளில் எத்தனையோ விதம். குத்து விளக்குகளில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. எப்போதும் எரிந்துகொண்டே இருக்கத் தூங்கா விளக்குகளும் தமிழகத்தில் இருந்து வந்தன. விளக்கின் மேல்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகுதியில் குடம் போலுள்ள உருவிலிருந்து எண்ணெய் சிறுகச் சிறுக வந்துகொண்டே இருக்கும். இந்தத் தூங்காமணி விளக் கைத்தான் நந்தா விளக்கு என்று குறிக்கிறார்கள்.

குத்து விளக்கின் ஐந்து முகங்கள் ஒரு ஸ்திரீக்கு இருக்க வேண்டிய ஐந்து குணங்களையே குறிக்கின்றன. அவை அன்பு, மன உறுதி, நிதானம், சமயோசித புத்தி, சகிப்புத்தன்மை ஆகியவை. இந்த ஐந்து குணங்களும் சேர்ந்தாற்போல பிரகாசிக்க வேண்டும்.

தீப வழிபாடு

பழந்தமிழ் மக்கள் இயற்கையையே இறைவனாகக் கண்டனர். இவர்கள் சூரியன், சந்திரன், அக்னி மூன்றையும் வழிபட்டு வந்தனர். தீப வழிபாடு "முத்தீ வேட்டல்" என்று அழைக்கப் பட்டலாயிற்று.

தெய்வம் என்பது சத்யம் அல்லது உண்மை, ஏனெனில் தெய்வத்திற்கும் அழிவில்லை; சத்தியத்திற்கும் அழிவில்லை. இந்த சத்யம் என்கிற பேருண்மை கோடி சூர்யப் பிரகாசத்துடன் விளங்குகின்றது. ஆனால் நம் கண்களுக்கு அது புலப்படுவதில்லை. நமக்கு இந்த உண்மையை விளக்குவதற்காகவே ஆசார்யர் (குருமார்கள்) தீவட்டி வைத்துக்கொண்டு காத்துக்கொண்டிருக் கிறார்கள். அவர்கள் விளக்கினால், விளக்குக்குள் இருக்கும் இறைவன் உங்கள் கண்ணுக்கும் காட்சியளிப்பான். இதைத் திருமூலர்,

விளக்கை விளக்கும் விளக்குடையாரிகள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே

என்கிறார்.

தீவட்டி வைத்திருக்கும் ஆசார்யர்களே 'விளக்குடையார்கள்' என்கிறார் அவர்.

சில ரகசியங்களை வெட்ட வெளிச்சமாக சொல்லிவிட்டால் மக்கள் அவைகளை அலட்சியம் செய்துவிடுவார்களோ என்ற அச்சம் நம் ஞானிகளுக்கு இருந்திருக்கிறது. ஆகவே தான் இவ் விஷயங்களை பூடகமாக சொல்லியிருக்கிறார்கள்.

நைடதம் என்ற மாபெரும் காப்பியத்தை இயற்றிய ஹர்ஷன், தான் வேண்டும் என்ற சில கிரந்திகளை (புரியாத முடிச்சு களை) தன் நூலில் வைத்திருப்பதாகவும், தக்க ஆசாரியனை அடுத்து அவர்களிடமிருந்து அதன் விளக்கத்தைப் பெற வேண்டும் என்றே அப்படி வைத்திருப்பதாகவும் கூறுகிறார்.

விளக்குக்குள்ளே ஒளிந்து நிற்கும் இறைவனை 'விளக்கவர்' என்கிறார் திருமூலர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒரு விளக்கை ஏற்றுவதற்கு ஒரு விளக்கு வேண்டியிருக்கிறதல்லவா? மற்றொரு விளக்கை ஏற்றியதினால் மூல விளக்கின் ஒளி எவ்வளவும் குறைந்து விடுவதில்லை. அதுபோல ஞானமும் பிறருடன் பகிர்ந்துக்கொண்டால் ஒருபோதும் குறைவதில்லை. இதைத்தான் 'பிரதிபம்' என்கிறார்கள். இந்த ஞானம் ஏற்பட இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தாகவேண்டும். இதைத்தான் 'தமஸோ மா ஜ்யோதிர் கமய' (இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு அழைத்துச் செல் என்பது இதன் அர்த்தம்) என்ற பிரார்த்தனையை அமைத்திருக்கிறார்கள்.

எல்லா ஒளியும் இறைவனிடமிருந்தே தோன்றுகின்றன என்பதை நிதர்சனமாகக் காட்டுவது கார்த்திகை விழா*தான். ஒளிகளுக்கெல்லாம் ஒளியாகத் திகழ்கிறான் இறைவன். ஒரே சமயத்தில் ஆயிரமாயிரம் கதிரவன்கள் தோன்றினால் அப்பேரொளியை ஒரு அளவுக்கு இறைவனுடைய ஒளிக்கு உவமையாகக் கூறலாம்.

உலகின் இருளை நீக்கும் கதிரவனும், மதியும், தாரகைகளும் அப்பரஞ்சோதியின் மூன்பு மங்குகின்றன.

இதை ருக்வேதம் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

''தீயொளி பரப்பும் இறைவனே! மாந்தருக்கு வெளிச்சத்தைத் கொடுப்பதற்காக வானத்தில் நீ கதிரவனையும் எண்ணற்ற தாரகைகளையும் தோற்றுவித்தாய். நீயே எங்களுக்கு உள்ளொளி ஏற்பட அருள் செய்ய வேண்டும்.''

இதையே 'திருவிசைப்பா'வில
ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வு சூழ்கடந்ததோர் உணர்வே
தெளிவளர்ப் பளிங்கின் திரள்
மணிக்குன்றே சித்தத்துள் தித் திக்கும் தேனே

என்று சேந்தனார் குறிப்பிடுகிறார்.

ஒளி கடவுளைப்போல எங்கும் நிறைந்தது. அது இல்லையேல் கனல் இல்லை. கனலின்றி கடல் ஆவியில்லை; அதில்லாமல் மழையில்லை; மழையின்றி பயிர் இல்லை; உயிர் இல்லை.

கார் ஒளி அண்டம் பொதிந்து உலகெங்கும்
பார் ஒளி நீர் ஒளி சாரொளி சீரொளி
வானொளி ஒக்க வளர்ந்து கிடந்து பின்
நேயொளி ஒன்றுய் நிறைந்திங்கு நின்றதே

இப்படி எங்கும் நிறைந்த இறையொளியை உள்ளாரக் கண்டு வணங்குவதே தீப தரிசனமாகும்.

---

* கார்த்திகை விழா பற்றி விவரம் 'தீபத் திருவிழாக்கள்' என்ற அத்தியாயத்தில் பின்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீப கைங்கர்யம் 2

அருள் ஒளி விளங்கிட ஆணவமெனுமோர்
இருளற என்னுளத் தேற்றிய விளக்கே
மயலற வழியா வாழ்வு மேன்மேலும்
இயலுற என்னுளத் தேற்றிய விளக்கே
கருவெளியனைத்திங் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிதரு விளக்கே.

—ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்
(அருட்பா)

ஆலயங்களில் விளக்கேற்றுவது மாபெரும் புண்ணியம். பண்டைக்காலத்தில் நம் முன்னோர்கள் ஆலயங்களில் விளக்கெரிய காணிக்கை அளித்ததுடன் அவ்விளக்கினை எரிய நெய் இடுவதற்காக பல நிவந்தங்களும் ஏற்படுத்தியிருந்தனர்.

குலோத்துங்க சோழன் ஆட்சியில் ஒரு வேடன் தவறுதலாக ஒரு மனிதனைக் கொன்றுவிட்டான். அக்கொலைக் குற்றத்திற்காக அவனுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. அந்த அபராதத் தொகையைக் கொண்டு கோயிலில் எப்போதும் அணையாத விளக்கு ஏற்றி வைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இறந்து போனவனின் ஆவியிலை கொலை செய்தவனுக்கு ஏற்படும் தீங்குகளிலிருந்து அவனைக் காக்க இத்தகைய வழி கண்டு பிடிக்கப்பட்டது.

ராஜராஜ சோழன் பிருஹதீஸ்வரர் கோவிலில் நாள்தோறும் நெய் விளக்கு ஏற்ற நாள் ஒன்றுக்கு இவ்வளவு நெய் அளிக்க வேண்டும் என்று ஏராளமான பசுக்களை மானியமாக அளித்தான் என்று ஒரு கல்வெட்டு கூறுகிறது. இம்மாதிரி பல மன்னர்கள், பிரபுக்கள் நிவந்தம் ஏற்படுத்தியுள்ளனர்.

இந்த விளக்கேற்றுவதன் புண்ணியத்தை வேதாரண்ய ஸ்தல புராணம் விளக்குகிறது. ஒரு எலி மறைக்காடு ஆலய சிவன் சந்நிதியில் விளக்கிலுள்ள நெய்யை உண்ண விளக்கின்மேல் ஏறிற்று. அப்போது மங்கி அணையவிருந்த விளக்குத் திரி இந்த எலியின் செய்கையால் தூண்டப்பட்டுப் பிரகாசமாக எரிய ஆரம்பித்தது. இந்த எலி மறு பிறப்பில் மாவலி சக்கிரவர்த்தி யாக விளங்கியது என்கிறது அப்புராணம். இதை அப்பர் சுவாமிகள்:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிறை மறைகாடு தன்னினீண்டெரி தீபந்தன்னைக்
கறை நிறத்தெலி தன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்ட வானுலக மெல்லாம்
குறைவறக் கொடுப்பரீ போலும் குறுக்கை வீரட்டனரே

என்று இதை சிறப்பித்துள்ளார்.

பல ஆலயங்கள் லட்ச தீபம் ஏற்றுவது மாபெரும் விழாவாக இன்றும் நடைபெற்று வருகிறது. (மயிலை கபாலி ஆலயத்தில் வைகாசி பௌர்ணமியன்று இவ்விழா நடைபெறுகிறது.) எங்கு பார்த்தாலும் அகல் விளக்கு எரியும். ஆலயம் முழுவதுமே ஜோதிர் மயமாக விளங்கும்.

"விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞானம் அகும்" இது அப்பர் சுவாமிகளின் திருவாக்கு. ஞான விளக்கேற்று முன்பு அகவிளக்கு ஏற்றிப் பழகுதல் வேண்டும். அகவிளக்கு ஏற்ற புறவிளக்கு ஏற்ற வேண்டும்.

உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணரி நெய் யட்டி உயிரெனும் திரி மயக்கி
இடம்படு ஞானத்தியால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.

ஞானிகள், அரசர்கள், பெரியோர்கள் இறந்தால் மோக்ஷ தீபம் ஏற்றப்பட்டு ஆலய கோபுரத்தில் வைப்பதுண்டு.

தீப கைங்கர்யம் செய்த அடியார்கள்

தீபம் ஏற்றுவதையே கைங்கரியமாகக் கொண்டு வாழ்ந்த மூன்று அடியார்களைப் பற்றி இங்கு குறிப்பிடுவது பொருத்தம்.

சென்னைக்கு அடுத்த திருவொற்றியூர் கோவிலில் விளக்கேற்றும் பணியை தினமும் விடாது செய்து வந்தவர் கலியநாயனார். இவர் எண்ணெய் வியாபாரி. நாளடைவில் இவரது வர்த்தகம் குன்றியது. அன்பர்களுக்கு வாரி வழங்கியதால் வறுமை நிலை ஏற்பட்டது. கூலி வேலை செய்தாவது கோயிலில் தீபம் ஏற்றும் பணியை மட்டும் விடாது செய்து வந்தார். ஒரு நாள் எண்ணெய் வாங்கப் பணமில்லை. எனவே தம் ரத்தத்தையே எண்ணெயாக வார்த்து விளக்கேற்ற முடிவு செய்து, கத்தியை உபயோகிக்கவும் முனைந்தார். உடனே ஈசன் தோன்றி அவர் கையைப் பிடித்து நிறுத்தினார்.

இவர் மாதிரியே திருவிளக்கு கைங்கர்யத்தில் ஈடுபட்ட மற்றொரு அடிகளார் கணம்புல்லர். வறுமை வந்துற்றபோதும் இவர் காட்டிற்குச் சென்று கணம்புல்லைச் சேகரித்து அதை விற்று அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு சிதம்பரம் ஆலயத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விளக்கேற்றும் கைங்கரியத்தைச் செய்து வந்தார். ஒருநாள் இவர் புல்லை எவரும் வாங்குவதாயில்லை. எனவே கணம்புல்லைப் போட்டே எரித்தார். பின்னர் தீ மூட்டி தானே அதில் குதிக்கவும் முனைந்தார். அச்சமயம் அவருக்கு ஈசன் அருள் இட்டியது.

அணங்குமைபாகம் ஆக அடக்கி ஆதிமூர்த்தி
வணங்குவார் இடர்கள் தீர்க்கும் மருந்து நல்லருந் தவத்த
கணம் புல்லார்க்கு அருள்கள் செய்து காதலாம் அடியார்க்கு
என்றும்

குணங்களைக் கொடுப்பர் போலும்

என்று இவர் பெருமையை சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

திருவாரூரில் நமிநந்தியடிகள் என்கிற அடியார் நெய்விட்டு விளக்கேற்றும் திருப்பணியைச் செய்து வந்தார். இவருக்கு ஒரு நாள் நெய் கிடைக்கவில்லை. சில சமணர்கள் இவரது திருப்பணியைப் பரிகசித்து. ''உங்கள் கடவுளுக்கு நெய் விட்டுத்தான் விளக்கேற்ற வேண்டுமோ? தண்ணீர்விட்டு விளக்கேற்ற லாகாதோ?'' என்று கேட்டனர். மனம் நொந்த நமிநந்தியடிகள் குளத்துத் தண்ணீரை அகலில் விட்டு விளக்கேற்றினார். விளக்குகள் சுடர் விட்டு எரிந்தன.

இவருடைய தொண்டைப் பாராட்டி அப்பர் அடிகள் பாடினார்.

ஆராய்ந்தடித் தொண்டர் ஆணிப்பொன் ஆரூரகத்தடக்கி
பாரூர் பரிப்பத்தம் பங்குனி உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீராற் திருவிளக்கிட்டமை நாடறியுமன்றே

எங்கும் எதிலும் இறைவனே காண்பதே உண்மையான இறை வழிபாடு. நம் முன்னோர்கள் இயற்கையிலுள்ள எல்லா பொருள்களிலுமே தெய்வத்தைக் கண்டனர். அப்படிக் கண்ட வற்றுள் ஒன்றுதான் ஒளிதரும் விளக்கு.

''தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா! நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா'' என்று பாரதியார் பாடினார்.

கொழுந்து விட்டெறியும் தீயிலும் அருள் வடிவான் ஆண்டவனைக் கண்டது கவிஞன் உள்ளம். அதனால் தீயைத் தீண்டும் போதும் இறைவனைத் தீண்டுங்கால் ஏற்படுகிற பேரின்பத்தை அடைந்தார் பாரதியார். பாரதியின் கருத்து கவிஞனின் கற்பனை அன்று. தெய்வபக்தனின் அனுபவம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விளக்கில் தெய்வ பூஜைகள் 3

இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிறப்பு அற எறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதி

—திருமாளிகைத் தேவர்

இறைவனே ஜோதி ஸ்வரூபம்தான். மாலும் அயனும் சிவ பெருமானின் அடிமுடி தேடிய *கட்டத்தில் சிவபெருமான் ஜோதி பிழம்பாகிறார். அசுரர்களை வென்று அவர்களைப் பாதாளத்திற்கு விரட்டியது தங்கள் திறமைதான் என்று கர்வமடைந்த தேவர்கள் முன்பு அம்பிகை மாபெரும் ஜோதியாக அவர்கள் முன் தோன்றி திகைக்க வைத்ததாக கேன உபநிஷத் கூறுகிறது. ஐயப்ப பக்தர்களின் சபரி மலை யாத்திரையில் ஜோதி தரிசனம் காண்பது மிக முக்கியமானதாகும்.

ஜோதியாகிய இறைவன் சுடர்களை ஏற்றி வைக்கிறான். நாமோ விளக்கை ஏற்றி வைக்கிறோம்.

சோதியை யோக வழியால் காண முடியாத மக்கள் சரியைத் தொண்டுகளால் காண முயல வேண்டும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. சரியைத் தொண்டுகளில் ஒன்று திருவிளக்கிடல். சிவஞான சித்தியாரில் 'தீதில் திருவிளக்கிட்டு' என்றும், அப்பர் தேவாரத்தில் 'விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஜோதி, சுடர், விளக்கு இம்மூன்றும் தொடர்புடைய மூன்று ஒளிகள். இறைவனே இம்மூன்றுமாக இருக்கிறார் என்பதை மாணிக்கவாசகர் தன் திருவாசகத்தில்,

ஜோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே, பரனே, பால்கொள் வெண்ணீற்றாய்
பங்கயத்தானும் மால் அறியா நீதியே

என்கிறார்.

தெய்வங்களை பூஜிக்குமுன் அவர்களை ஒரு இடத்தில் ஆவாஹனம் செய்ய வேண்டும். மஞ்சளைப் பிடித்து வைத்து விக்னேஸ்வரரை ஆவாஹனம் செய்கிறோம்.

கும்பத்தில் ஜலத்தை வைத்து மாவிலை தேங்காய் முதலியவைகளை வைத்து வருணனை ஆவாஹனம் செய்கிறோம். ஆலய

* சிவபெருமானின் அடிமுடி தேடிய வரலாறு கார்த்திகை விழா அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கும்பாபிஷேகத்தின்போது அந்த ஆலய பிம்பத்திலுள்ள தெய்வ சக்திகளை கலசங்களிலேயே ஆவாஹனம் செய்யப்படுகிறது.

அம்மாதிரி தீபங்களில் நாம் பூஜிக்கும் தெய்வங்களை ஆவாஹனம் செய்ய வேண்டும். இறைவன் ஜோதி ஸ்வரூபம். இறைவியும் அப்படியே. ஆகவே அவர்களை குத்து விளக்கை ஏற்றிவைத்து ஆவாஹனம் செய்வது மிகச் சிறந்த முறை. தெய்வமே இதை மிகவும் விரும்புகிறது எனவும் கூறப்படுகிறது.

தீப துர்க்கை

பொதுவாக தீபத்தை லக்ஷ்மி என்போம். இம்மாதிரி தீப துர்க்கை என்று ஒரு சக்தி வாய்ந்த துர்க்கை இருக்கிறாள். இவளுடைய மூல மந்திரமாவது :

ஓம் ஆம் ஹ்ரீம் க்ரோம் அமும் துர்கே ஏஹ்யேஹி ஆவேசய ஆவேசய க்ரோம் தும் துர்கே க்ரோம் ஹ்ரீம் ஆம் ஹும் பட் ஸ்வாஹா ॥

தீபச்சுடரில் ஜ்வலிப்பவளும், செந்தாமரை போன்றவளும், சிம்மத்தில் அமர்ந்திருப்பவளும், சூலம், வில், அம்பு, சக்கரம், சங்கம், தாமரை, அபயம், வரதம் இவைகள் உள்ள கரங்கள் உள்ளவளும், மங்களகரமானவளும், தன் ஒளியால் இருளைப் போக்குபவளுமான தீப துர்க்கை எல்லோ காக்கட்டும் என்பது இவளது தியான சுலோகத்தின் அர்த்தம்.

பஞ்சாதனமே தீபம்

ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, கணபதி, மகேஸ்வரர் இவர்கள் ஐவரைப் பூஜிப்பது பஞ்சாயதன பூஜை. குத்து விளக்கின் ஐந்து முகங்களும் இந்த ஐந்து தெய்வங்களைக் குறிப்பிடுகின்றன. எவ்வளவோ தேவதைகள் இருக்க இந்த ஐந்தை பற்றி மட்டும் குறிப்பிடுவானேன்? இந்த ஐந்து தெய்வங்களின் அருள் நமக்கு வேண்டும். எல்லா தேவர்களும் இந்த ஐவரில் அடங்கிவிடுகிறார்கள். உடல் ஆரோக்கியத்துடன் இருக்க சூரியன் அருள்புரிகிறார். தாயின்றி சேய் வாழ முடியாது. ஆகவே அம்பிகை அருள் முக்கியம். பரிபாலன மூர்த்தியான விஷ்ணுவின் தயவு இல்லாமல் எப்படி பாதுகாப்புடன் இருக்க முடியும்? அக்ஞானம் அழிய சிவபெருமான் தயவு வேண்டும். இக் காரியங்களுகெல்லாம் ஏற்படும் விக்னங்களைத் தடுக்க விநாயகர் அருள் வேண்டும்.

தீபத்தை அலங்கரித்து வஸ்திரம் மலர்மாலை எல்லாம் சாத்தி கோலமிட்ட இடத்தின்மேல் நெல்லைப் பரப்பி அதன் மீது வைக்க வேண்டும். சாக்ஷி தீபத்தைக் கொண்டு ஒவ்வொரு முகமாக ஏற்ற வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒவ்வொரு முகத்தையும் ஏற்றுமுன் பின்கண்ட மந்திரத்தைச் சொல்லி ஏற்ற வேண்டும்.

ஐந்து முகங்களே தீப பூஜைக்காக அன்றி சாதாரணமாக ஏற்றினாலும் அப்போது ஒவ்வொரு முகத்திற்கும் பின்வரும் காயத்ரியைச் சொல்லி தீபம் ஏற்ற வேண்டும்.

கணபதி காயத்ரீ :—தத் புருஷாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி தந்நோ தந்தி பிரசோதயாத்.॥

அம்பிகை காயத்ரீ :—(லக்ஷ்மி, காயத்திரி, துர்க்கை காயத்ரீ எதை வேண்டுமானாலும் சொல்லலாம்.)

லக்ஷ்மி:—மஹாலக்ஷ்மீ ச வித்மஹே விச்ணு பத்நீ ச தீமஹி தந்தோ லக்ஷ்மி பிரசோதயாத் ॥

துர்க்கா:—காத்யாயனய வித்மஹே கன்னியாகுமரி ச தீமஹி தந்நோ துர்க்கப் பிரசோதயாத் ॥

ருத்ர காயத்ரீ :—தத்புருஷாய வித்மஹே மஹா தேவாய தீமஹி தந்நோ ருத்ரப் பிரசோதயாத் ॥

விஷ்ணு காயத்ரீ :—நாராயணய வித்மஹே வாசுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணுர் பிரசோதயாத் ॥

ஆதித்ய காயத்ரீ :—பாஸ்கராய வித்மஹே மஹாத்யுதிகராய தீமஹி தந்நோ ஆதித்ய: பிரசோதயாத் ॥

அம்பிகையை விளக்கில் ஆவாஹனம் செய்தால் ஐந்து முகங்களே ஏற்றும்போது

1. ஸர்வ மங்கள மாங்கல்யே...
2. சரணுகத தீனுர்த்த
3. ஸர்வ ஸ்வரூப சர்வேச
4. ரோகான் அசேஷான்
5. ஸர்வ பாப பிரசமனம்

என்று ஆரம்பமாகும் துர்க்கா சப்த ஸ்லோகி மந்திரங்களே சொல்லி முறையே ஐந்து முகங்களையும் ஏற்றவும். கடைசியில்

மந்திராணும் மாத்ருகா தேவி சப்தானும் ஞானரூபிணி।
ஞானனும் சின்மயானந்த சூன்யானும் சூன்ய சாக்ஷிணி

என்று எல்லா முகங்களையும் சேர்த்து பிரார்த்திக்கவும்.

சிவபெருமானே விளக்கில் ஆவாஹனம் செய்தால் ஐந்து முகங்களே ஏற்றும்போது

1. சத்யோ ஜாதம் பிரபத்யாமி, ஸத்யோ ஜாதாயவை நமோ நம:
பவே பவே நாதிபவே பவஸ்யமாம் பவோத் பவாய நம:॥
2. வாம தேவாய நமோ ஜ்யேஷ்டாய நமச்ரேஷ்டாய நமோ ருத்ராய நம: காலாய நம: கலவிகரணுய நமோ பலாய நம: பலப்ரதமதநாய நமோ ஸர்வபூததமநாய நமோ மனோன் மனுய நம:॥
3. அகோரோப்யோ தகோரேப்யோ கோர கோர தரேப்யோ: ஸர்வேப்யஸ் ஸர்வ ஸர்வேப்யோ நமஸ்தேஸ்து ருத்ர ரூபாயா நம:

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. தத்³ புருஷாய வித்³மஹே மஹா தே³வாய
தீ⁴மஹி தன்னோ ருத்³ர ப்ரசோத³யாத் ॥
5. ஈசானஸ்ய ஸர்வ வித்யானும் ஈஸ்வரஸ் ஸர்வ பூதானும்
ப்³ரஹ்மாதிபதிர் ப்³ரஹ்மணோபதிர் சிவோமே
அஸ்து சதாசிவோம்

ஐந்து முகங்களுக்கும் சேர்த்து :

நமஸ்தே அஸ்து பகவான் விஸ்வேஸ்வராய மஹா தேவாய த்ரயம்பகாய திரிபுராந்தகாய திருகாக்னி காலாய, காலாக்னி ருத்ராய, நீலகண்டாய, ம்ருத்யுஞ்ஜயாயை, ஸர்வேஸ்வராய சதாசிவாய ஸ்ரீமந் மகா தேவாய நம:

(முருகனும் சிவனும் ஒன்றே. ஆகவே முருகனுக்கும் இதே மந்திரங்களே.)

மகா விஷ்ணுவை விளக்கில் ஆவாஹனம் செய்தால் ஐந்து முகங்களே ஏற்றும்போது

1. க்ஷிரோ தன்வத் பிரதேச... 4. மேகச்சியாமம்
2. பூபாதென 5. சகங்க சக்கிரம்
3. சாந்தாகாரம்

என்று விஷ்ணு சகஸ்ரநாம தியான சுலோகங்களைச் சொல்லி ஏற்றி கடைசியில் எல்லா முகங்களுக்கும்

சாயாயாம் பாரிஜாதஸ்ய ஹேம ஸிம்ஹாஸநோபரி
ஆஸீன மம்ப ஸ்யாமம் ஆயதாக்ஷி மலங்ருதாம்
சந்திராணனம் சதுர்பாஹும் ஸ்ரீவத்ஸாங்கித வக்ஷஸாம்
ருக்மிணீ சத்ய மாபாப்யாம் ஸஹிதம் கிருஷ்ணமாச்ரயே

ஆதித்தனும் மகாவிஷ்ணும் ஒருவரே. ஆகவே சூரியனுக்கும் இதே மந்திரங்கள்.

சாதாரணமாக கணபதியை தீபத்தில் ஆவாஹனம் செய்வதில்லை.

ஐயப்பன் பூஜையிலும் மூன்று தீபங்களை வைத்து பூஜிப்பதைக் காணலாம். ஒன்று விநாயகர், நடுவில் ஐயப்பன் மற்றொன்று துர்க்கா, இவர்கள் ஆவாஹனம் செய்யப்பட்டு பூஜிக்கப்படுகிறார்கள்.

லக்ஷ்மியைத் தீபத்தில் பூஜை செய்வது வெள்ளிக்கிழமைகளில் செய்யலாம். செவ்வாய்க்கிழமைகளில் செய்வது மங்கள கௌரிவிரதம் எனப்படும். இதை அங்காரக வார விரதம் என்றும் சொல்வார்கள்.

சப்தசதி பூஜையில் பதின்மூன்று அத்யாய தேவதைகளுக்கு 13 அகல் விளக்கை ஏற்றி பூஜிப்பது வழக்கம். 16 குத்து விளக்குகள் வைத்து பூஜிப்பது திதி நித்யா ஷோடசலக்ஷ்மி தீப பூஜையாகும். இது தவிர புரட்டாசி சனிக்கிழமையில் அகல் ஏற்றி இரும்பு உரலின்மேல் வைத்து செய்யும் ஸ்தம்பராஜ பூஜையும் மகா விஷ்ணுவைக் குறித்து செய்யும் அகண்ட தீப பூஜையும், நவக்கிரக தீப பூஜையும் மிக விசேஷப் பலனைத் தரக் கூடியவை. இவை எல்லாம் இங்கு சேகரித்துத் தரப்பட்டுள்ளன

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீப லக்ஷ்மி (விளக்கு பூஜை)

லக்ஷ்மி தேவியே தீப மங்கள ஜோதியாக விளங்குபவள். இல்லங்களை அழகாகவும், சுத்தமாகவும் வைத்துக்கொண்டு அந்தி மங்கியதும் தீபம் ஏற்றி தெய்வம் தொழுதால் அழகு லக்ஷ்மி இன்றும் விஜயம் செய்கிறாள் என்பது நமது பெண்மணிகளின் நம்பிக்கை.

தங்களையும் அழகு செய்துக்கொண்டு, கொல்லைக் கதவை அடைத்து வாசற்கதவைத் திறந்து வைத்து, விளக்கைத் துடைத்து குங்குமம் இட்டு, மலர் சூட்டி, அழகு செய்து, குத்து விளக்கை ஏற்றி தூய உள்ளத்துடன் தொழும்போது அந்த தீபச் சுடரிலே ஊரூராக வீடுவீடாக சுற்றிப் பார்த்து வரும் மகாலக்ஷ்மியின் சுடர்மேனியை தரிசித்துப் பேறு பெறலாம் என்பர்.

குத்துவிளக்கு பூஜை

(ஸ்ரீ ஸ்வர்ண கௌரி பூஜா விதி)

சுக்லாம் பரதம்.....சாந்தயே

ஆரம்பத்தில் விக்நேஸ்வரர் பூஜை செய்யவும்

மாமோ பார்த்த...ப்ரீத்யர்ந்தம் சுபே சோபனே
மம இஹ ஜன்மனி ஜன்மாந்திரே அக்ஷய
சௌபாக்ய பிராப்தி காம்ய: | புத்திர
பௌத்திராதி தனதான்ய ஐசுவரிய பிராப்தி
யர்த்தம் சுவர்ண கௌரி தீப ஜோதி பூஜாம்
கரிஷ்யே ||

பிரதான தீபம் ஒரு குத்துவிளக்கு (ஒரு முகம்) இதற்கு பக்கத்தில் நமக்கு நேரில் பூஜை செய்யும் குத்துவிளக்கு ஒன்றை வைத்து ஐந்து முகம் ஏற்றி வைக்கவேண்டும்.

பிரதான தீபத்திற்கு ஆவாஹன மந்திரம்:

தீப தேவி மகாதேவி சுபம் பவது மே ஸதா
யாவத் பூஜா ஸமாப்தி ஸ்யாத்வாத் பிரஜ்வல ஸுஸ்திதா ||

ஐந்து முக விளக்கில் மற்ற பூஜை செய்யவும்.

தேஹி தேவி ஸமாகச்ச பிரார்த்தயேஹம் ஜகன் மயே
இமாம் மயா க்ருதாம் பூஜாம் க்ருஹாண ஸுரசத்தமே—
அஸ்மின் சுவர்ண கௌரி தீப ஜோதி த்யாயாமி.

ஆவாஹயாமி பவானித்வம் மகாதேவி
ஸர்வ சௌபாக்ய தாயினி, அநேக
ரத்ன சுசிதம் ஆசனம் பிரதி க்ருஹ்யதாம்
சுவர்ண.....தீப ஜோதி நம: ஆசனம் சமர்ப்பயாமி

ஸுசாரு சீதலம் திவ்யம் நானாரத்ன
ஸுவாஸிதம் பாத்யம் கிருஹாண தேவேஸி
மகாதேவி நமோஸ்துதே சுவர்ண.....
தீப ஜோதி நம: பாத்யம் சமர்ப்பயாமி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ பார்வதி மஹா பாகே சங்கரப்பிரிய வாதினி
அர்க்யம் கிருஹாண கல்யாணி பர்த்தா ஸஹ பதிவ்ரதே
சுவர்ண.....தீப ஜோதி நம: அர்க்கியம் சமர்ப்பயாமி

கங்காதோயம் சமானீதம் ஸுவர்ண கலசேஸ்திதம்
ஆசம்யதாம் மகா பாஹோ ருத்ரேண ஸஹி
தேனகே சுவர்ண...தீப ஜோதி நம: ஆசமனீயம்

கங்கா ஸரஸ்வதி ரேவா காவேரி
நர்மதே ஜலே: | ஸ்நாபிதாஸி மயா தேவி
ததா சாந்திம் குருஷ்வமே ||
சுவர்ண.....ஜோதி நம: ஸ்நானம் சமர்ப்பயாமி.

சர்வ பூஷாதிகே ஸௌம்யே லோக லஜ்ஜா
நிவாரணே, வாஸதி பிரதிக்ருஹ்யதாம்
மயாதுப்யம் சமர்ப்பிதே சுவர்ண...ஜோதி நம: வஸ்திரம் சமர்ப்ப

கர்ப்பூர குங்குமா யுக்தம் ஹரித்திராதி சமன்விதம் [யாமி
கஸ்தூரிகா சமாயுக்தம் சந்தனம் பிரதிக்ருஹ்யதாம்
சுவர்ண.....ஜோதி நம: கந்தாஷ்தான் சமர்ப்பயாமி.

ஹரித்திரா குங்குமம் சைவ ஸிந்தூரம் கஜ்ஜலம் ததா |
ஸௌபாக்ய திரவ்ய ஸம்யுக்தம் க்ருஹாண
பரமேஸ்வரி சுவர்ண...ஜோதி நம: சௌபாக்ய திரவ்யம் ஸமர்

மால்யாணீச சுகந்தினி மாலத்யானி ச [சமர்ப்பயாமி
அம்பிகே மயாஹிருதாணி புஷ்பாணி
ப்ரதி க்ருஹ்ணீஷ்வ சாங்கரி சுவர்ண.....
ஜோதி நம: புஷ்பமாலாம் சமர்ப்பயாமி.

இதம் பலம் மயாதேவி ஸ்தாபிதம்
புரஸ்தவ தேனமே ஸபலா வாப்தி பவேத் ஜன்மனி |
ஜன்மனி | சுவர்ண...ஜோதி நம: பூர்ணகும்பம் சமர்ப்பயாமி

(வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பழம், புஷ்பம், மஞ்சள் தடவிய
தேங்காய் இவைகளை தீபத்தின் பாதத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.)

அங்க பூஜை

உமாயை	நம:	பாதௌ	பூஜயாமி
கௌர்யை	,,	ஜங்கே	,,
பார்வத்யை	,,	ஜானுனி	,,
ஜகந்மாத்ரே	,,	ஊரு	,,
ஜகத் பிரதிஷ்ட்டை	,,	கடிம்	,,
மூலப் பிரஹ்ருதியை	,,	நாபிம்	,,
அம்பிகாயை	,,	உதரம்	,,
அன்ன பூரணியை	,,	ஸ்தனம்	,,
சிவசுந்தரியை	,,	வக்ஷஸ்	,,
மகாபலாயை	,,	பாஹூன்	,,
வரப்பிரதாயை	,,	ஹஸ்தம்	,,
கம்புகண்ட்யை	,,	கண்டம்	,,
பிரம்மவித்யை	,,	ஜிஹ்வான்	,,

CC-0.In.Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai .

சாம்கரியை	நம:	முகம்	பூஜயாமி
சிவாயை	,,	நேத்ரே	,,
ருத்ராணி	,,	கர்ணம்	,,
சர்வ மங்களாயை	,,	லலாடம்	,,
சர்வேஸ்வரியை	,,	சிரஸ்	,,
சுவர்ண...ஜோதி	,,	சர்வாணி அங்காணி	,,

தீப பூஜை

ஓம் ஸ்ரீமாத்ரே	நம:	காமாக்ஷி சுந்தரியை	நம:
ஸ்ரீலோகமாத்ரே	,,	ராஜலக்ஷ்மியை	,,
ஸ்ரீபரதேவதாயை	,,	சித்தலக்ஷ்மியை	,,
ஸ்ரீராஜராஜேஸ்வர்யை	,,	திரிபுரலக்ஷ்மியை	,,
ராஜபீடநிவேஸினி	,,	ஸர்வ விக்ன நிவாரிணே	,,
நிஜாஸ்ரிதாயை	,,	சௌபாக்ய லக்ஷ்மியை	,,
பார்வத்யை	,,	அண்டநாயகியே	,,
வரலக்ஷ்மியை	,,	ஆனந்த ஸ்வரூபியே	,,
சிவரூபை	,,	பிரும்மாண்ட நாயகியை	,,
மஹாலக்ஷ்மியை	,,	க்ரியா சக்தியை	,,
பங்கஜ லக்ஷ்மியை	,,	ஜோதி லக்ஷ்மியை	,,
தான்யலக்ஷ்மியை	,,	தனலக்ஷ்மியை	,,
சந்தானலக்ஷ்மியை	,,	விஜயலக்ஷ்மியை	,,
வீர்யலக்ஷ்மியை	,,	ஜயலக்ஷ்மியை	,,
சிவசக்தியை	,,	காமவல்லியை	,,
தீபராஜாயை	,,	சுபலக்ஷ்மியை	,,
இச்சா சக்தியை	,,	க்ரஹலக்ஷ்மியை	,,
ஞான சக்தியை	,,	சீதாலக்ஷ்மியை	,,
ஸுவர்ண ஸ்வரூபியே	,,	ஸர்வமங்கள காரணியை	,,
தீபலக்ஷ்மியை	,,	ஸர்வாங்க ஸுந்தரியை	,,
தைர்யலக்ஷ்மியை	,,	நவக்ரக தாரணியை	,,
வித்யாலக்ஷ்மியை	,,	அலங்கார நாயகியை	,,
கஜலக்ஷ்மியை	,,	அகிலாண்ட நாயகியை	,,

(இதன் பின் லக்ஷ்மி அல்லது துர்க்கை அஷ்டோத்திரம் செய்யவும்)

தேவத்ரும ஸமுத்பூத காலா க்ருஹ ஸமன்விதா: ஆக்ரேயத-மயம் தூப: பவானீக்ராண தர்பண: தீப கௌரியை நம: தூப மாக்ராபயாமி.

ஸாஜ்யம் த்ரிவர்த்தி ஸம்யுக்தம் வன்னிஞ யோஜிதம் மயா-ச்ருஹாண மங்களம் தீபம் த்ரைலோக்ய திமிராபஹம். தீப கௌரியை நம: அலங்கார தீபம் தரிசயாமி.

அன்னம் சதுர்விதம் ஸ்வாதுரணஸை ஷட்பிஸ் ஸமன்விதம் பக்ஷ்ய போஜ்யம் ஸமாயுக்தம் தீப கௌரியை நம: நைவேத்யம் ஸமர்ப்பயாமி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பூகீபல ஸமாயுக்தம் நாகவல்லீ தளீர்யுதம் கற்பூர சூர்ண ஸம்யுக்தம் தாம்பூலம் ஸமர்ப்பயாமி.

நீராஜனம் ஸமாநீதம் கர்பூரேண ஸமன்விதம் தீப்யம் தாஸ்யாம் யஹம் தேவி க்ருஹ்யதாம் பரமேஸ்வரி கற்பூர நீராஜனம் சமரிப்பயாமி தீப கௌர்யை நம: நீராஜனாந்தரம் ஆசமனீயம் ஸமரிப்பயாமி.

யானி கானி ச பாபானி ஜன்மாந்தர க்ருதானி ச தானிதானி வினச்யந்தி ப்ரதக்ஷிணம் பதே பதே புத்ரான் தேஹி-தனம் தேஹி ஸௌபாக்யம் தேஹி ஸுவ்ருதே.

அந்யாம்ச சர்வகாம்யாம் ச தேஹி தேவி நமோஸ்துதே. (ப்ரார்த்தனை) ஸ்வர்ண கௌரீ மஹா தேவ்யா வ்ருத ஸம்பூர்த்தி ஹேதவே ப்ராத்யேத் விஜவரயாய வாயனம் ப்ரததாம்யஹம். ஸ்வலம்க்ருதா ஸுகவாஸின்யா பாதிவ்ருத்யேன பூஜிதா: மகா ஸம்ருத்யர்த்தம் ப்ரக்ருண்ணந்து தீப கௌரீ பூஜாம் வாயனம் ஸமரிப்பயாமி.

திருவிளக்கு பிரார்த்தனை

விளக்கே திருவே வேதனுடன் நற்பிறப்பே
ஜோதி விளக்கே ஸ்ரீதேவி பெண்மணியே
அந்தி விளக்கே அலங்காரப் பெண்மணியே
காந்தி விளக்கே காமாட்சி தேவியரே.

பசும்பொன் விளக்கு வைத்து, பஞ்சுத் திரிபோட்டு, குளம் போல நெய்விட்டு கோலமுடன் ஏற்றிவைத்தேன்; பொட்டும் இட்டேன் குங்குமத்தால்; பூமாலை சூட்டிவிட்டேன்.

ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குலம் விளங்க
வைத்தேன் திருவிளக்கு மாளிகையும் தான் விளங்க

மாளிகையிலே ஜோதியுள்ள மாதாவைக் கண்டுகொண்டேன்.

மாங்கல்ய பிச்சை, மடிப்பிச்சை தாருமம்மா! சந்தானப் பிச்சையுடன் தனங்களைத் தாருமம்மா! பெட்டி நிறைய பூஷணங்களைத் தாருமம்மா! புகழ் உடம்பைத் தந்து எங்கள் பக்கத்திலே நில்லுங்கம்மா! அகந்தெளிவைத் தந்து எந்தன் அகத்தினிலே வாழுமம்மா!

அடுத்த பக்கத்திலுள்ள "தாரித்திரிய த்வம்ஸினி" நாமாக்கள் மிக அபூர்வமானது. உடனே பலனை அளிக்கக் கூடியது. இதை உதவியவர்கள் ஆச்சாள்புரம் சாக்த ரத்ன ஸ்ரீ கோவிந்தராஜ பிள்ளையும், அவருடைய ஆராய்ச்சிக் குழுவும். அவர்களுக்கு எங்கள் நன்றி.

—பிரதிபா பிரசுரத்தினர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தாரித்ரிய த்வம்ஸநி சக்தி நாமங்கள்

புவனேஸ்வரியை லக்ஷ்மியினுடன் வழிபட வேண்டும். இந்த நாமாக்கள் மகாலக்ஷ்மியின் கல்யாண குணங்களைச் சொல்வதால் புவனேஸ்வரி திரிசதி அர்ச்சனைக்குப் பிறகு இதைச் சொல்லி அர்ச்சிக்க வேண்டும். இதை ஸ்ரீ சக்கரத்தில் பூஜிப்பது விசேஷம் என்று ஸ்ரீவித்யார்ணவ தந்திர கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாமாவிற்கு முன்பும் ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் என்றும் முடிவில் நம: என்றும் சேர்த்துச் சொல்லவும்.

ஹாரநூபுர ஸம்யுக்தாயை
கமலத்வய ஹாரிண்யை
லக்ஷ்ம்யை
பரசிவமய்யை
சுத்த ஜாம்பூநத ப்ரபாயை
கமலவஸத்யை
தேஜோ ரூபாயை
விஸ்வ மோஹிந்யை
ஸர்வ பூஷோ ஜ்வலாங்க்யை
பீஜபூரதராயை 10

ஆத்யா சக்த்யை
ஸகல ஜநன்யை
கலச தாரிண்யை
விஷ்ணுவாமாங்க ஸம்ஸ்தாயை
கமலாலயாயை
ஸ்ரீமத் ஸௌபாக்ய ஜநன்யை
பார்கவ்யை
ஸநாதன்யை
ஸர்வ கர்ம பலாவாப்தி
ஸாதநாயை
ஏக சுகாவஹாயை 20

ஹிரண்யவர்ணயை
ஹரிண்யை
சுவர்ண லலிதாஸ்ரஜாயை
ஸமஸ்த ஸம்பத் சுகதாயை
அகில ஸௌபாக்ய ஜநன்யை
ஸமஸ்த கல்யாண கர்யை
ஞானதாயை
ஹரி ப்ரியாயை
விஞ்ஞான சம்பத் சுகதாயை
அஸ்வ பூர்ணயை 30

ஹிரண்மய்யை
விசித்ர வாக்பூதி கர்யை
ரத மத்யாயை
மனோஹராயை
ஹஸ்திநாத ப்ரமோதாயை
அனந்தஸௌபாக்யதாயின்யை
ஸர்வபூதாந்த் ரஸ்தாயை
ஸ்வர்ண ப்ராகார மத்யகாயை
ஸமஸ்தபூதேஸ்வர்யை
விஸ்வரூபாயை 40

ப்ரபா மய்யை
தாரித்ரிய துக்கௌக தமோ
பத்மின்யை [ஹந்த்ரை
தினர்த்தி விச்சேத தக்ஷாயை
க்ருபாகலிதலோசனயை
ப்ரணதஸ்வாந்த சோகக்நை
சரணாகத ரக்ஷண்யை
சாந்த்யை
காந்த்யை
பத்ம ஸம்ஸ்தாயை 50

கமநீயகுணாச்ரயாயை
கமாந்த்யை
தாந்த்யை
துரித க்ஷய காரிண்யை
சசிசேகர ஸம்ஸ்தாயை
தனதான்ய ஸம்ருத்திதாயை
சக்த்யை
ரக்த்யை
நித்யபுஷ்டாயை
ரஜனீகர சோதராயை 60

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கரீஷிண்யை
பக்த்யை
பவஸாகர தாரிண்யை
மத்யை
ஸித்யை
தீருத்யை
மதுசூதன வல்லபாயை
புஷ்ட்யை
ஹிரண்யமாலாயை
சுப லக்ஷண லக்ஷிதாயை 70

அதிதூர்கதி ஹந்த்ரியை
வரஸத்கதி தாயின்யை
திவிதேவ கணராத்யாயை
புவலூர்த்தி விநாசின்யை
ஆர்த்ராயை
புஷ்கரிண்யை
புஷ்ட்யை
தரணீதர வல்லபாயை
ஸ்ரீத்ரிய துக்கஹந்த்ரை
[illegible]ம்ஸின்யை 80

ஸ்ரீ விஷ்ணுவக்ஷஸ்தலாயை
அசேஷ பூதிதாயை
லக்ஷணயை
அலக்ஷிதாங்யை
பத்மாயை
பத்மாஸநார்ச்சிதாயை
வித்யா ஸம்பத்கர்யை
தேவஸங்காபிபூஜிதாயை
பத்ராயை
பாக்ய ரூபாயை 90

நித்யாயை
நிர்மலபுத்திதாயை
ஸத்யாயை
ஸர்வபூதஸ்தாயை
ரத்னகர்பாந்தரஸ்திதாயை
ரம்யாயை
புத்தாயை
காந்தாயை
காந்திமத் பாஸிதாங்காயை
ஸர்வஸௌக்ய ப்ரதாயை 100

தேவ்யை
பக்தைகா பயதாயின்யை
பயதாயின்யை
ஸ்வேதத்வீப க்ருதா வாஸாயை
ஜகன்மாத்ரே
ஜகன்மய்யை
ரத்னகர்ப ஸ்திதாயை
சௌம்யாயை
க்ஷீராம்புதி க்ருதாலயாயை
ப்ரஸன்ன ஹ்ருதயாயை
பரிபூர்ணயை 110

ஹிரண்மய்யை
வசுந்தராயை
ஸ்ரீ தராயை
வசுதோக்த்ரை
க்ருபாமய்யை
விஷ்ணுப்ரியாயை
ரத்னகர்பாயை
ஸமஸ்தபலதாயை
ரஸாதலகதாயை
சுவ்ருதாயை 120

[illegible]ரிப்ரியாயை
[illegible]
ஸமுன்னத முக்யை
ஸமஸ்தபுர ஸம்ஸ்தாயை
பரிபூர்ண மனோரதாயை
கருணரஸ நிஷ்யந்த நேத்
ரத்வய விலா ஸின்யை
ஸர்வராஜ க்ருஹாவாஸாயை
மஹாலக்ஷ்மீ குணன்விதாயை
வைகுண்ட நகரஸ்தாயை
க்ஷீரஸாகர கன்யகாயை 130

யோகி ஹ்ருத் பத்ம ஸம்ஸ்
கல்பவல்யை [தாயை
தயாவத்யை
பக்தசிந்தாமணயே
ஆதி மாயே
ரமாயை
நிராகாராயை
ஸாகராயை
ப்ரும்மாண்ட சயதாரிண்யை
ஏகநாதாயை 140

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆதிய லக்ஷ்மியை
அஞ்ஞான ஹந்த்ரை
குணதிகாயை
ப்ரஞ்ஞானலோசனையை
ப்ரஞ்ஞான லோசனு சேஷவாக்
ஜாட்ய மலஹாரிண்யை
சுஸ்பஷ்ட வாக்தாயின்யை
ஸர்வ ஸம்பத் விராஜிதாயை
ப்ரபாலாவண்ய சுபகாயை
தோக்த்ரை 150

ஸ்வர்ணப்ரதாயை
ஸமஸ்தவிக்னௌக ஹந்த்ரை
போகதாயை
விசக்ஷணையை
தேவாதிநாதவந்த்யாயை
தினபோஷண தத்பராயை
மாங்கல்ய பீஜமஹிமாயை
நிதிரூபிண்யை
[illegible]நந்தாகாயை
விஸ்வத்யாதிலக்ஷ்மியை 160
ஸர்வ
மஹா ஸித்த லக்ஷ்மியை
ராஜ்யலக்ஷ்மியை
திவ்யலக்ஷ்மியை
சுஸ்[illegible]

மங்கள தேவதாயை
பக்திதாயை
முக்திதாயை
புக்திதாயை
ஸத்கதிப் ரதாயை
கீர்த்திதாயை 170

தனதாயை
புத்ர பௌத்ர விவர்த்தின்யை
பத்மாநநாயை
பத்மோருவே
பத்மாக்ஷ்யை
அச்வதராயை
கோதாயை
தனதாயை
மஹாதநாயை
சந்த்ரசூர்யாக்நி ஸர்வபாயை
180

ஜாதவேதாஸ்த்ர ஸம்ஸ்தி
தாயை
திக் கஜேந்திர ஸமாராத்யாயை
திவ்யபூஷணபூஷிதாயை
ஸர்வஸம்பத் [illegible]தாயை
[illegible]தி-ஸாதின்யை
தாரித்ரியத் வம்ஸின்யை

தாரித்ரிய த்வம்ஸிநி சக்தி நாம சம்பூர்ணம்.

மங்கள கௌரீ தீப பூஜா

செவ்வாய்க்கிழமையன்று அம்பிகை ஒரு சமயம் அவதரித்தாள். அன்று தேஜோமயமான தேவியை தீபத்தில் பூஜிப்பது மிக விசேஷம். ஆவணி மாதம் எல்லா செவ்வாய்க்கிழமைகளிலும் தேவியை தீபத்தில் பூஜிக்க வேண்டும்.

விவாகமாகி கன்யகையாக இருக்கும்போது தந்தை வீட்டில் ஒரு வருஷமும், புருஷன் வீட்டில் நான்கு வருஷங்களும் இந்த பூஜையை விரதமாக ஏற்று முடிக்க வேண்டும். (இதற்கு சரவண மங்கள வார விரதம் என்றும் பெயர்) தீர்க்க சுமங்கலியாக இருப்பதே இதன் முக்கிய பலன். கௌரீ அஷ்டோத்திரத்தினால் அர்ச்சிப்பது மிக விசேஷம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீரஸ்து

ஸ்ரீ லக்ஷ்மியஷ்டோத்தர சத நாமாவளிः

[கீழ்க்கண்ட ஒவ்வொரு நாமாவின் முன்னுல் 'ஓம்' என்றும் பின்னுல் நமः' என்றும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.]

1. ப்ரக்ருத்யை 2. விக்ருத்யை 3. வித்யாயை 4. ஸர்வபூத ஹிதப்ரதாயை 5. ச்ரத்தாயை 6. விபூத்யை 7. ஸுரப்யை 8. பரமாத்மிகாயை 9. வாசே 10. பத்மாலயாயை 11. பத்மாயை 12. சுசயே 13. ஸ்வாஹாயை 14. ஸ்வதாயை 15. ஸுதாயை 16. தந்யாயை 17. ஹிரண்மய்யை 18. லக்ஷ்ம்யை 19. நித்ய புஷ்டயாயை 20. விபாவர்யை 21. அதித்யை 22. தித்யை 23. தீப் தாயை 24. வஸுதாயை 25. வஸுதாரிண்யை 26. கமலாயை 27. காந்தாயை 28. காமாக்ஷ்யை 29. க்ரோத ஸம்பவாயை 30. அனுக்ரஹப்ரதாயை 31. புத்தயே 32. அநகாயை 33. ஹரிவல்ல பாயை 34. அசோகாயை 35. அம்ருதாயை 36. தீப்தாயை 37. லோகசோக விநாசின்யை 38. தர்மநிலயாயை 39, கருணாயை 40. லோகமாத்ரே 41: பத்மப்ரியாயை 42. பத்மஹஸ்தாயை 43. பத்மாக்ஷியை 44. பத்மஸுந்தர்யை 45. பத்மோத்பவாயை 46. பத்மமுக்யை 47. பத்மநாபப்ரியாயை 48. ரமாயை 49. பத்ம மாலாதராயை 50. தேவ்யை 51. பத்மின்யை 52. பத்மகந்தின்யை 53. புண்யகந்தாயை 54. ஸுப்ரஸந்நாயை 55. ப்ரஸாதாபி [illegible]ய 56. ப்ரபாயை 57. சந்த்ரவதநாயை 58. சந்த்ராயை முக்[illegible] ஸுஹாதர்யை 60. சதுர்புஜாயை 61. சந்த்ரரூபாயை 59. சந்த[illegible] விந்துஸ்தலாயை 64. ஆஹ்லாதஜநந்யை 62. இந்திரா[illegible]யை [illegible] [illegible]விகர்யை 68. ஸத்யை 69. 65. புஷ்டயை 66. ஹித்தாயை விமலாயை 70. விச்வஜநந்யை 71. துஷ்டயை 72. தாரித்ர்யநாசி ந்யை 73. ப்ரீதி புஷ்கரிண்யை 74. சாந்தாயை 75. ஸுக்லமால்யா ம்பராயை 76. ச்ரியை 77. பாஸ்கர்யை 78. பில்வநிலயாயை 79. வராரோஹாயை 80. யசஸ்விந்யை 81. வஸுந்தராயை 82. உதாரர்ங்காயை 83. ஹரிண்யை 84. ஹேமமாலிந்யை 85. தனதான்யகர்யை 86. ஸித்தயே 87. ஸ்த்ரைண ஸௌம்யாயை 88. சுபப்ரதாயை 89. நிருபவேஸ்ம கதாநந்தாயை 90. வரலக்ஷ் ம்யை 91. வஸுப்ரதாயை 92. சுபாயை 93. ஹிரண்யப்ராகாராயை 94. ஸமுத்ரதநயாயை 95. ஜயாயை 96. மங்களா தேவ்யை 97. விஷ்ணுவக்ஷஸ் ஸ்தல ஸ்திதாயை 98. விஷ்ணுபத்ன்யை 99. ப்ரஸந்நாக்ஷ்யை 100. நாராயணஸமாச்ரிதாயை 101. தாரித்ர் யத்வம்ஸின்யை 102. தேவ்யை 103. ஸர்வோபத்ரவ வாரிண்யை 104. நவதுர்காயை 105. மஹாகாள்யை 106. ப்ரஹ்மவிஷ்ணு சிவாத்மிகாயை 107. த்ரிகாலஜ்ஞாந ஸம்பந்நாயை 108. புஷ் நேஸ்வர்யை.

ஸ்ரீ லக்ஷ்மியஷ்டோத்தர சத நாமாவளி—சம்பூர்ணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திவ்ய மங்கள சப்தசதீ தீபார்ச்சன பாராயண விதி

[இந்த திவ்ய மங்கள ஸப்தசதீ தீபார்ச்சன பாராயண விதியானது தஞ்சை மாவட்டம் சீர்காழி தாலுக்கா ஆச்சாள்புரம் பெருநிலக்கிழார் சாக்தரத்னம் ஸ்ரீமான் பி. கோவிந்தராஜ பிள்ளை அவர்களின் மந்திர சாஸ்திர லைப்ரரியில் இருந்து, புதுக்கோட்டை அதிஷ்டானம் டாக்டர் பிரும்மஸ்ரீ K. வைத்யநாத சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ துர்கோபாஸனை கல்பத்ருமத்திலிருந்து எடுத்து ஆராய்ச்சி செய்து ஷி பிள்ளை அவர்களால் பூஜித்து இந்த பூஜை முறையானது இருந்து வருகிறது. இந்த பூஜையின் பெருமையை நன்கறிந்த திரு. பிள்ளை அவர்கள் "யான் பெற்ற இன்பம் இவ் வையகம் பெருக" என்ற நோக்கத்துடன் இதை வெளியிட உதவியுள் ளார்கள்.]

ஸ்ரீ சண்டிகா சப்தசதீ மஹாமந்திரம்

(மாலா மந்திரம்)

ஓம் ஐம் ஹ்ரீம் மஹாதுர்கே நவாக்ஷரீ நவதுர்க்கே நவ [illegible]மிகே நவசண்டி மஹாமாயே மஹாமோஹோ மஹாயோ[illegible]நித்தரே ஜயே மதுகைடப விக்ராவிஷ்ணு ஸஹிஷாசுரமர்த்தினி தூம்ரலோசன ஸம் ஹந்த்ரீ சண்டமுண்ட வினாசினி ரக்தபீஜாந்தகே நிசும்பவித்வம்ஸினி சும்பதர்பக்னீ தேவி அஷ்டாதசபாஹுகே கபால கட்வாங்க சூல கட்க கேடகதாரிணீ சின்னமஸ்தகதாரிணீ ருதிர மாம்ஸபோஜனீ சமஸ்த பூத பிரேதாதி யோகத் சவம்ஸினி பிரும்மேந் திராதிஸ்துதே தேவீ மாம் ரக்ஷய ரக்ஷய மம சத்ருன் நாசய நாசய ஹ்ரீம் பட் ஹ்ரூம்பட் ஓம் ஐம் க்லீம் சாமுண்டாயை விச்சே.

ஸகல அபீஷ்டங்களை விரும்புவரும், சம்பத் ஐச்வர்யங்களை விரும்பு வரும் விவாஹம், வித்யை, வெற்றி, செல்வாக்கு, சீர்சிறப்பு, சந்தானம் இவைகளை விரும்புவோரும், துக்கம், சோகம், வ்யாதி, விபத்து இவைகளின் நிவர்த்தியை விரும்புவோரும், எளிதில் சீக்கிரம் பெறவல்லதும் அம்பாளின் பரிபூர்ண கடாக்ஷமும் அருளும் பொருளும் அடையவல்லதுமான பூஜையாகும் இது.

ஒரு தாம்பாளத்தில் அரிசியை நிரப்பி அத் தாம்பாளத்தை கோல மிட்டு பீடத்தில் வைத்து அதன் மத்தியில் தீர்த்த கலசத்தையும் கலசத்தை சுற்றிலும் வட்டமாக பதின்மூன்று அகல் விளக்குகளை, அரிசியில் வைத்து, தீபங்களில் நெய் விட்டு, திரிபோட்டு, சுமங்கலி களைக் கொண்டு விளக்கை ஏற்றவும். மத்தியில் இருக்கும் கலச தீர்த் தத்திலும், விளக்குகளில் பிரகாசிக்கும் ஜ்யோதிர் மண்டலத்திலும், பிரதான தேவதையாகிய ஸ்ரீ மஹாகாளி, ஸ்ரீ மஹாலக்ஷ்மீ, ஸ்ரீ மஹா

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸரஸ்வதி ரூபிணியான ஸ்ரீ ஸப்த சதிசண்டிகா பரமேஸ்வரியை சமஷ்டி தேவதையாக முதலில் ஆவாஹனம் செய்துகொண்டு பூஜித்து பிறகு மேலே சொல்லியபடி 13 (பதின்மூன்று) தீபங்களிலும் பதின் மூன்று அத்யாய தேவதைகளை ஆவாஹித்து பூஜித்து அந்தந்த ஸப்த சதீ அத்யாயங்களை பாராயணம் செய்ய வேண்டுமென்பது சுருக்கம்.

தேவதா ஆவாஹனத்திற்குமுன் அக்ஷதையில் மாத்ருகா தேவதை யும், கலசதீர்த்தத்தில் வருண தேவதையையும் விதிப்படி ஆவாஹனம் செய்து பூஜிக்கவும்.

சர்வ பூஜைகளுக்கும் அங்கமாக முதலில் விக்னேச்வர பூஜை, கண்டா பூஜை, கலசபூஜை, சாக்ஷீதீபபூஜை, குருவந்தனம் முதலியவை செய்துகொள்ளவும்.

விக்னேஸ்வர பூஜைக்குப் பின் செய்துகொள்ளவேண்டிய பூஜா சங்கல்பம்.

சுக்லாம்...சாந்தயே. மமோபாத்த சமஸ்த...ஸ்ரீ சப்தசதீ சண்டிகா ப்ரீத்யர்த்தம்...தேசகாலாதௌ சங்கீர்த்ய ஸ்ரீ ஸப்த சதீ சண்டிகா பரமேஸ்வரீ ப்ரஸாதேன

ஸர்வ ஸங்கஷ்டஹரணம் ஸர்சத்ருவினாசனம்
ஸர்வதுக்கவிமோசனம் பக்தசித்த ஸம்மோதனம்

சரணார்த்திஜன சந்த்ராணனம் தீனார்த்தத்ராண நிபுணம்
பாப பிரணாசனம் அசேஷஜனக்ஷேமங்கரம்
சாக [illegible] ஸாதக ஜன சிவங்கரம்
பக்தஜனபரங்கர [illegible]
நிஜபக்தப்ரியங்கரம் ஸர்வலோகசிவ[illegible]

அராதிவர்க பயானகம் ஸர்வசோக நிவர்த்தகம்
உபாஸகானும் அபயாவஹம் பூஜகானும் விஜயாவஹம்

சகலகல்யாண குணாவஹம் சம தம க்ஷமாவஹம்
வேதசாஸ்த்ர வித்யாகரம் பக்தமங்கள வர்த்தனம்

அபீஷ்டபலசாதனம் நிகிலமங்களாயதனம்
ஸர்வவிக்ன ப்ரசமனம் ஸத்ஸந்தான ஸமிருத்திதம்

பக்த பரிபாலன நித்ய ஜாகருபம் துஷ்டசத்ரு பாதகம்
சிஷ்ட ஸாதுவர்க்க ஸாதகம் தைவஸான்னீத்ய ஸம்பாதகம்

பரஷ்பாப நிவாகரம் பவ ப்யாத்ஸப் ரக்ஷகம்
அதர்மநிரத சிக்ஷகம் ஸர்வவித்யா ப்ரகாசகம்

ஸர்வசக்தி ஸம்வர்த்தனம் தீர்காயுஷ்ய விவர்த்தனம்
ஸதாசார ப்ரவர்த்தனம் ம்ருத்யுபீதி நிருஹரணம்

ஸர்வஸித்தி ஸாதனம் சத்ருவாக் சித்த ஸ்தம்பனம்
ஸகலதாரித்ரியப்ரணாசனம் புண்யகார்யஸந்துக்ஷணம்

துஷ்டப்ராஸி நிபரீஹரணம் ஸர்வபூதாசுர வித்ராவணம்
க்ரூரபிசாச ஸமூச்சாடனம் தர்ம மார்க்க ப்ரதர்சகம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

யசஸ்கரம் தேஜஸ்கரம் வசஸ்கரம் வர்ச்சஸ்கரம்
ஸர்வமங்களா பரமேஸ்வரீ ப்ரீதிகரம் ஸப்தசதீ
அத்யாய தேவதா திவ்ய மங்கள தீபபூஜனம் யதாசக்தி
யதாமதி யதாலப்த திரவ்யை: கரிஷ்யே.

அநேந திவ்ய மங்கள தீப பூஜனேன பரமேஸ்வரீம் சப்தசதீ தேவதாம் ப்ரணயாமி ஸப்சதீ தேவதாப்ரஸாதேன மம ஸஹ குடும்பஸ்யஸர்வஸ்ய ஜகத: ச ஸகலவிதக்ஷேமம் ஸம் ப்ராப்தயாமி.

முதலில் அக்ஷதையில் பூஜிக்க வேண்டிய 16 மாத்ருகைள்.

1.	ஓம் கௌர்யை நம:	9.	ஓம் ஸ்வதாயை நம:
2.	" பத்மாஸனய "	10.	" ஸ்வாஹாயை "
3.	" சச்யை "	11.	" மாத்ருப்யோ "
4.	" மேதாயை "	12.	" ஸ்ரீ.கணபதயே "
5.	" ஸாவித்ரியை "	13.	" திருஷ்டியை "
6.	" விஜயாயை "	14.	" புஷ்டியை "
7.	" ஜயாயை "	15.	" துஷ்டியை "
8.	" தேவசேனயை"	16.	" குலதேவதாயை"

என்று தீபத்திற்கு அடியில் பரப்பியிருக்கும் அரிகியில் பூஜித்து மாத்ருகாதேவதைகளுக்கு தூபதீப நைவேத்ய உபசாரங்கள் செய்ய வேண்டியது.

பிரார்த்தனை :—ஆயுராரோக்ய ஐஸ்வர்யம் தததம் மாதரோ மம | நிர்விக்னம் ஸர்வ கார்யேஷு குருத்வம் ஸகணாதிப: ||

ஸமஷ்டி பீடபூஜை :—தேவ்யா: தக்ஷிணே பாகே.
ஸ்வகுரும் மானஸோபசாரை: ஸம்பூஜ்ய
மத்யே.

ஒவ்வொரு நாமாவிற்கு முன்பு "ஓம்" என்றும் முடிவில் "நம:" சேர்த்துக் கொள்ளவும்.

ஆதார்சக்தி கமலாஸநாய	அனேச்வர்ய
மூலப்ரக்ருத்யை	ஸத்வாய
காலாக்னி ருத்ராய	ரஜஸே
மஹாமண்டூகாய் நம	தமஸே
ஆதிகூர்மாய்	மயாயை
மஹாவராஹாய	திவ்யாயை
அனந்தாபூம்யை	ஓம்கார பீடாயை
அம்ருதார்ணவாய	பூர்ணகிரி பீடாயை
ரத்னத்வீபாய்	காமரூப பீடாயை
கல்ப்தரவே	உத்யான பீடாயை
ரத்னஸிம்மாஸநாய	ஜாலந்தர பீடாயை
தர்மாய்	கோலகிரி பீடாயை
ஞானய	பூர்ணகிரி பீடாயை
வைரார்க்யாய	ஸம்ஹாரகிரி பீடாயை
ஐச்வர்யாய்	கோல்ஹாகிரி பீடாயை
அதர்மாய	காமரூபகிரி பீடாயை
அக்ஞானய	பூர்வாதி
கற்றூரிடும்பைக் கோவாய் போற்றி

வில்லால் வியனரணம் எய்தாய்
வீரட்டம் காதல் விமலா போற்றி.

தீபத்திற்கான திருவிழாக்கள் தீபாவளி ஒன்று. மற்றென்று கார்த்திகை.

தீப ஆவலி (தீபவரிசை) தான் தீபாவளியாகி விட்டது. நரகாசுரன் கொடுமை என்ற இருள் உலகில் சூழ்ந்தபோது கண்ணன் என்ற ஒளி பிரகாசித்தது. அதைக் கொண்டாடுவதே தீபாவளி. தமிழ் நாட்டில் தீபாவளியை விட கார்த்திகையைத்தான் தீபத் திருநாளாகக் கொண்டாடுகிறோம். வடநாட்டில் தீபாவளியன்று தான் அவர்கள் தீபங்களை ஏற்றி வரிசையாக வைக்கிறார்கள்.

இவ்விழாக்களில் விளக்கு ஏற்றுவது பெரிதல்ல அவைகளை அணையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும், விளக்கு அணைவது தீப சகுனம். விளக்கிலிருந்து பொறி உதிர்ந்தால் இறைவருள் நிச்சயம் என்று அர்த்தம். சாப்பிடும்போது விளக்கு அணைந்தால் அத்துடன் எழுந்து விடுவது முன் கால வழக்கம்.

ஆதிசங்கரர் சிறுவனாக இருந்தபோது ஆற்றுக்குச் சென்றார். அப்போது இராக் காலம் அவருடைய காலை ஒரு முதலை பிடித்துக் கொண்டது. அப்போது "என் தாயாரிடம் சொல்லிவிட்டு வருகிறேன்' என்று சத்தியம் செய்து கொடுத்து விட்டு சங்கரர் அன்னையிடம் வந்து நடந்ததைக் கூறினார். சங்கரர் ஆற்றிற்குத் திரும்பியபோது அவர் அன்னை ஒரு எரிகிற விளக்கை மரக்காலுக்குள் மறைத்துக் கொண்டு வந்தாள். முதலை சங்கரரின் காலைப் பிடித்து உண்ண ஆரம்பித்தது. பின்னால் நின்ற அன்னை மூடியிருந்த விளக்கை திடீரென்று வெளியே காட்டி உடனே அணைத்து விட்டாள். தீய சகுனம் ஏற்பட்டு விட்டதால் முதலை அவரை உண்ணுமல் விட்டது. சங்கரர் உயிர் தப்பினார். ஆறறிவு இல்லாத பிராணிகள் கூட தர்மத்திற்குக் கட்டுப்பட்டிருந்த காலம் அது.

விளக்கு அணைவது ஒரு தீய சகுனம் என்றே கருதப்படுகிறது அரசர்கள் இந்த விளக்குகள் எக்காரணங்கள் கொண்டும் எப்போதும் அணையாமல் இருக்க அதிகக் கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். அரசன் வாழும் இடங்களில் விளக்கு அணையாமல் இருப்பதற் கென்று நியமிக்கப்பட்ட இளம் பெண்களால் இரவு முழுவதும் கவனமாகக் கவனித்து வரப்பட்டது. இதை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
இரவு பகற் செய்யுந்தின் பிடி யொள்வாள்
விரவுவரிக்கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீ இக்
கையமை விளக்க நந்து தொறுமாட்ட

என்ற முல்லைப் பாட்டினுல் அறியலாம்.

கார்த்திகை தீப விழா

எல்லா ஒளியும் இறைவனிடமிருந்தே தோன்றுகின்றன என்பதை நிதர்சனமாக காட்டுகிறது கார்த்திகை விழாதான்.

கார்த்திகை மாதம் முப்பது நாளும் விளக்குகள் ஏற்றி வாசல் பக்கத்தில் வைப்பது மிக விசேஷம். இம்மாதம் முழுவதுமே கங்கைக் கரையில் தீப மேற்றுவது உண்டு. கார்த்திகை பௌர்ணமியன்று கோவில்களில் சொக்கப்பனை கொளுத்துகிறார்கள். விளக்கும் ஏற்றும் போதும் சொக்கப்பனைக்குத் தீ வைக்கும் போதும் சொல்லப்படும் மந்திரம் எல்லாருக்கும் நன்மை ஏற்பட வேண்டும், எங்கும் மங்களம் பொங்க வேண்டும் என்ற அர்த்தத்தையுடையவைகளே.

நம் நாட்டில் பண்டைக் காலம் தொட்டு கார்த்திகைத் தீப திருவிழா நடந்து வந்திருப்பதற்கான பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. தொல்காப்பியத்தில் "வேலினேக்கிய விளக்கு நிலையும்" என்பதற்கு இது கார்த்திகைத் திங்களில் கார்த்திகை நாளில் ஏற்றிய விளக்கு என்று நச்சினர்க்கினியர் உரை எழுதியிருக்கிறார்.

சீவக சிந்தாமணியில் 'கார்த்திகை விளக்கிட்டன' என்று கூறப்படுகிறது. 'நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள் விளக்கு' என்று கார் நாற்பதிலும், 'கார்த்திகை சாற்றிற் கழிவிளக்கு' என்று களவழி நாற்பதிலும் வருவது கவனிக்கத்தக்கது.

'மலை விளக்கு' 'குன்றின் மேலிட்ட தீபம்' இப்பழமொழிகள் இவ்விழாவின் பழம் பெருமைகளை உணர்த்துகிறது.

சைவர்களின் காரணம், காரியம், விஜயம் என்ற மூன்று சிவாகமங்களிலும் கார்த்திகை விழாவைப்பற்றிக் கூறியிருக்கிறது.

அடிமுடி தேடிய வரலாறு

மைந்த நின்னை என் வலப்புறத் தளித்தனன் அறிய
பைந்து ழாய் மது வண்ணனை யென் இடப்பாலிற்
தந்தனன் நீவிர் வெங்கரிமுன் அழல் வேற்கந்தனே ரெனக்
கருணையினுல் உச்சி மோந்துரைத்தான்

—கூர்ம புராணம்

சிவாலயங்களில் கர்ப்பக் கிரகத்தில் சிவனது பின்புறம் லிங்கோற்பவ மூர்த்தியைக் காணலாம். சிவபெருமான் ஜோதிமயமாக நின்ற போது அடியை மகாவிஷ்ணுவும், முடியை பிரும்மனும் தேடி தோல்வியுற்ற வரலாறு கொண்டதே இம் மூர்த்தம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரும்மனுக்கு தன் படைப்புத் தொழில் இல்லையேல் உலகமே இல்லை என்ற அகங்காரம் ஏற்பட்டது. அம்மாதிரியே திருமாலுக்குத் தன் காப்பாற்றும் தொழில் இல்லையேல் உலகம் என்னவாகும் என்ற பெருமிதம் ஏற்பட்டது. ஆகவே பிரும்மாவுக்கும் விஷ்ணுவுக்குமிடையே யார் பெரியவர் என்ற தகராறு ஏற்பட்டு விட்டது.

அப்போது இருவருக்குமிடையே ஒரு ஜோதி எழுந்தது. இதன் அடி அல்லது முடியை யார் காண்கிறார்களோ அவர்களே பெரியவர் என அசரீரி எழுந்தது. பிரும்மா முடியைத் தேட அன்னமாகவும், விஷ்ணு அடியைத் தேட பன்றியாகவும் உருவெடுத்து முயன்றனர். ஆனால் அவர்கள் முயற்சி வெற்றி பெறவில்லை.

திருமாலும் பிரும்மனும் தேடிக் காணுத தேவனை என்னுள்ளே தேடிக் கண்டுக்கொண்டேன் என்கிறார் திருநாவுக்கரசர்.

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடித் திரிந்தும் காணவல்லதோ
மாட மாளிகை சூழ்திரு அம்பலத்
தாடிய பாதம் என நெஞ்சுள் இருக்கவே.

இப்படி ஜோதியாக நின்ற சிவம் இப் புண்ணிய பூமியில் 12 இடங்களில் ஜோதிர் லிங்கமாகக் காட்சி அளிக்கிறது.

சிவபெருமான் ஒளிப் பிழம்பாக ஒரு தூண் மாதிரி நின்றுரல்லவா? அதே போல் தூணே (தாணுவே) லிங்கமாக உள்ள ஸ்தலம் சுசீந்திரம். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ளது.

சிவபெருமான் கருணை காட்டி விஷ்ணுவையும், பிரும்மனையும் தன்னுள்ளே சேர்த்துக் கொண்டார் என்பதையே மேலே குறிப்பிட்டுள்ள கூர்ம புராணப் பாடல் விளக்குகிறது. சுசீந்திரம், ஸ்தாணுமாலயன் இந்த மும்மூர்த்திகளும் கொண்ட ஸ்வரூபம். ஏகபாத மூர்த்தி என்று நடுவில் சிவனும், ஒரு பக்கம் விஷ்ணுவும், ஒரு பக்கம் பிரும்மாவும் இருக்கும் மூர்த்தம் திருவானைக்காவல் அம்பிகை சன்னதியிலும் திருவொற்றியூர் ஆலயத்திலும் காணப்படுகிறது.

அடிமுடி தேடியதன் தத்துவம்

இறைவன் ஜோதியாக விளங்குகிறான் என்றால் எது முதல் எது வரை அந்த ஜோதி பரவியுள்ளது என்பதை எவராலும் கூற முடியாது.

நாம் கணக்கிடும் எண்களை எடுத்துக் கொள்வோம். முதலில் பூஜ்யம். அதன்மேல் 1, 2, என்று எண்ணிக்கொண்டே போனால் எண்ண முடியாத ஒரு நிலை வரும். அதே போல் பூஜ்யத்திற்குக் கீழே ஒன்று, அரை, கால், அரைக்கால், வீசம் என்று பகுத்துக் கொண்டே போனால் அதுவும் அதே நிலையை அடைகிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இடையிலுள்ள சில எண்களை மட்டும் நம்மால் அறிய முடிகிறதே ஒழிய முற்றும் அறியாத நிலையில் நாம் உள்ளோம். ஆகவே அளவற்ற கோடி அண்டங்களாகவும், ஜோதி வடிவமாகவும் எங்கும் நீக்க மற நிறைந்துள்ள இறை வடிவதனைக் கண்டவர்கள் ஓர் அளவுதான் காண்பார்களே தவிர ஆதி, அந்தம், கண்டவர்கள் எவரும் இல்லை.

மகாவிஷ்ணு கீழ் நோக்கிச் சென்றார். அது தாமஸ குணம். மேலோங்கி நமிர்வது ராஜஸ குணம். இறைவனை தாமஸ குணத்தாலும், ராஜஸ குணத்தாலும் காண முடியாது. சத்துவ குணத்தால் மட்டுமே காணலாம்.

இயல்புக்கு மாறுகச் சென்றாலும் இறைவனைக் காண முடியாது. பன்றி, பாதமாகிய தாமரையைத் தேடி சென்றது. தாமரையில் வாழும் அன்னம் சடையாகிய காட்டைத் தேடிச் சென்றது.

பணத்தின் துடுக்கினாலும், படிப்பின் மூறுக்கினாலும் இறைவனைக் காண முடியாது. விஷ்ணு லக்ஷ்மியின் கணவர். (செல்வம்) பிரும்மா கலைமகளின் நாயகர் (கல்வி).

இறைவனை அன்பினாலே காணலாமே யொழிய ஆராய்ச்சி யால் காண முடியாது.

சிவபெருமான் ஜோதி வடிவமாக நின்றதை நினைவூட்டவே கார்த்திகை விழாவன்று சொக்கப்பனை கொளுத்தப்படுகிறது. நடுவில் பனையின அடிமரத்தை ஸ்தம்பமாக வைத்து, அதன் மேல் ஒரு பெரிய அகலில் விளக்கேற்றி வைக்கப்படும். சுற்றிலும் பன ஓலைகள் கட்டப்பட்டிருக்கும். சுவாமி புறப்பட்டு வெளிவந்ததும் அவர் முன்னிலையில் இந்த சொக்கப்பனை கொளுத்தப்படும்.

கார்த்திகைக்கு மூன்னள் வரும் பரணியன்று சாயும் வேளையில் ஒரு பெரிய அகல் விளக்கை ஏற்றி சிவபெருமானை அதில் ஆவாஹனம் செய்து தீபத்தை சுவாமி சந்நிதியில் வைத்துப் பூஜித்து மறுநாள் சொக்கப்பனைக்குள் இருக்கும் அடிமரத் தூண் மீது அதை வைக்க வேண்டும். சிவபெருமான் ஜோதி ஸ்வரூபன் எனபதை உணர்த்துவதே இந்த சொக்கப்பனைத் தத்துவம்.

ஆந்திராவில் இந்த சொக்கப்பனை வேறு விதமாகக் கொண்டாடப்படுகிறது. சிவபெருமான் உண்ட விஷம் அவரை ஒன்றும் செய்யாமல் இருந்தால், தான் தீக்குளிப்பதாக உமை வேண்டிக் கொண்டாளாம். அப்படியே தீயில் குதித்தாள். அனல் அக்னி குளிர்ந்து விட்டது.

ஆந்திர சிவாலயங்களில் ஒரு வாசல் மாதிரி மூங்கிலையும் பன ஓலையையும் கட்டி அதை எரிய விட்டதும் மூன்று முறை உமாபதியை அதன் வழியாகக் கொண்டு வருகிறார்கள். இதனை ஜ்வாலா தோரண விழா என்கிறார்கள்.

சொக்கப்பனையில் எரிந்த பகுதிகளைக் கொண்டுபோய் கொல்லைகளிலுள்ள பயிர் பச்சைகளில் போட்டு வைப்பது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வழக்கம். இதனால் செடி கொடிகளை நோய் அணுகாது என்ற நம்பிக்கை.

விளக்கொளி பெருமாள்

சிவபெருமான் ஜோதியாக விளங்கியது போல மகாவிஷ்ணு ஜோதியாக விளங்கியிருக்கிறார். இதை உணர்த்த காஞ்சீபுரத்தில் தீபப்பிரகாசர் என்ற பெயருடன் ஒரு பெருமாள் கோவில் கொண்டிருக்கிறார். இவரை விளக்கொளி பெருமாள் என்றும் அழைக்கிறார்கள். தீபபூஜையில் மகாவிஷ்ணுவை ஆவாஹனம் செய்யும் போது இந்த பெருமாளை தியானிப்பது மிகவும் விசேஷம்.

இத்தலத்திற்குத் திருத்தண்கா, தூப்புல் என்றும் பெயர். பிரும்மா யாகம் செய்தபோது அவர் மனைவி சரஸ்வதியாலேயே அவருக்கு இடைஞ்சல் ஏற்பட்டபோது ஜோதி ரூபமாக விளங்கியவர் பெருமாள்.

திருமங்கை யாழ்வாரின் திரு நெடுந்தாண்டகத்தில் முதல் பாட்டே விளக்கொளி பெருமாளைப் பற்றியதாகும்.

மின்னுருவாய் முன்னுருவில் வேத நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தாளுய்

என்று பாடுகிறார்.

எல்லா தெய்வமே தீபத்தில்

எல்லா தெய்வங்களுமே தீபத்தில் அடங்கியுள்ளனர். அதை விளக்கும் பாட்டு

சுடரோ சிவபெருமான் சூடு பராசக்தி
திடமார் கணநாதன் செம்மை படரொளியோ
கந்த வேளோடும் கருதுங்கால் சற்றேனும்
வந்ததோ பேத வழக்கு.

ஜோதியில் நெருப்பு சிவபெருமான். நெருப்பில் உள்ள சூடு அம்பிகை. செம்மை நிறம் பிள்ளையார், அதிலுள்ள ஒளி முருகன், ஜோதியே விஷ்ணுவும் சூரியனும்.

அக்னிஸ்தலம் அருணை

தமிழ் நாட்டில் பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாக விளங்குவது திருவண்ணாமலை. இங்குள்ள மலையே சிவஸ்வரூபமாகும். கார்த்திகையன்று இம்மலைமேல் தீபமேற்றப்படுகிறது. திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி. சிவபெருமான் ஒரு ஜோதியாக நிற்க விஷ்ணுவும், பிரும்மாவும் அடிமுடி தேடி வெற்றி பெற முடியாத சம்பவம் நடந்த தலம்.

கிளி கோபுரத்துள் பிரவேசித்துச் சென்றால் தீப தரிசன மண்டபம் வரலாம். கார்த்திகை தீபத்தன்று இம்மண்டபத்தில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பஞ்ச மூர்த்திகள் வந்தபின் தான் மலையில் (மாலை சுமார் 6 மணிக்கு) தீபம் ஏற்றப்படும்.

அண்ணுமலையாருக்கு தினசரி ஆறு கால பூஜை நடைபெறுகிறது.

மலைமீது தீபத் திருநாள் அன்று ஒரு பெரிய செப்பு அண்டாவில் 24 முழம் உள்ள துணியில் ஒரு மணங்கு கற்பூரத்தைத் தூளாகத் தூவி திரியாக்கி 20 மணங்கு நெய் ஊற்றி ஒரு வீசைக் கற்பூரக் கட்டியை ஏற்றி நெருப்பை பற்ற வைப்பார்கள். இந்த தீபம் பல மைல்களுக்கு அப்பாலும் தெரியும்.

திருவண்ணுமலை ஆலயம் பிரும்மாண்டமானது. நீளம் 1500 அடி. அகலம் 700 அடி. நான்கு பிராகாரங்கள், நான்குபுறம் நான்கு கோபுரங்கள். கிழக்கில் பிரதான கோபுரம். கிருஷ்ண தேவராயர் கட்டியது 217 அடி உயரம். தெற்கில்—திருமஞ்சன கோபுரம், மேற்கே—மாயக் கோபுரம், வடக்கே—அம்மணி அம்மாள் கோபுரம்.

ஆயிரங்கால் மண்டபத்தை கிருஷ்ண தேவராயர் கட்டினார். உள்வாயில் கோபுரம் வல்லாள மகாராஜா கட்டியது. மங்கையர்க்கரசி மண்டபத்தில்தான் தீபத்தன்று வெளிவரும் பஞ்சமூர்த்திகள் எழுந்தருள்வார்கள்.

கிழக்கிலுள்ள பாஸ்கர மலையிலிருந்து இந்திரனும், மேற்கிலுள்ள தண்டாத்ரி மலையிலிருந்து வருணனும், தெற்கிலுள்ள அமராசல மலையிலிருந்து யமனும், வடக்கிலுள்ள திரிசூலம் என்ற மலையிலிருந்து குபேரனும் சிவபெருமானை பூஜிக்கிறார்கள்.

தேவிக்கு இறைவன் மீது ஏதோ கோபம் வந்து புறப்பட்ட போது கணபதி, முருகன் குழந்தைகளுக்காகவாவது இங்கு இருக்க வேண்டும் என்று வேண்டப்பட்டபோதும் கோபம் தணியாமல் அம்பிகை அக்குழந்தைகளுக்கு பாலும் தராமல் போனதால் அபீதகுஜாம்பாள் (உண்ணுமுலை) என்ற பெயர் ஏற்பட்டதாகவும், பின்னர் கோபம் தணிந்து வந்து சிவபெருமானைப் பூஜித்து அவர் உடம்பில் பாதியைப் பெற்றாள் என்றும் புராணம் கூறுகிறது.

நினைக்க முக்திதரவல்ல திருவண்ணுமலையில் கார்த்திகைதீப விழா காண வேண்டும். முடியாதவர்கள் தங்கள் ஊர் ஆலயங்களில் சொக்கப்பனை கண்டு, வீட்டில் விளக்கேற்றி வைத்து விதிப்படி விரதமிருந்து இறைவன் திருவருளைப் பெற வேண்டும். 'நான்' என்ற ஆணவம் அகன்றால் இறைவன் அருள் புரிவான் என்றும் அகஇருளைப் போக்கி ஞானம் பெற நாம் முயல வேண்டும் என்பதுமே இவ்விழாவின் அடிப்படைத் தத்துவங்கள்.

சோதி உணர்கின்ற வாழ்வு
சுகமென்ற போகமது தந்து எனை ஆள்வாய்
—அருணகிரிநாதர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீப ஸ்தோத்திரம்

தீபோ (அ) ய மருணத்ரீ ஸ ஸ்ரூப : ஸம்ப்ரகாஸீத :
பஹிரந்தஸ்ச ஸர்வேஷாம் அந்தகாரம் வ்யபோஹது ॥

அருணசலேஸ்வரர் ஸ்வரூபமாக உள்ள இந்த தீபம் எல்லோருடைய உள்ளிருட்டையும் வெளியிருட்டையும் போக்கடிக்கட்டும்.

ஸந்த்யாயாம் மங்களாகாரம் ஸர்வ மங்களா காரகம்
தேஜோலிங்க ப்ரதீகம் தம் தீபம் நித்யம் நமாம்யஹம் ॥

ஸந்த்யா காலத்தில் மங்களமான ஸ்வரூபத்தைக் கொண்டும் எல்லோருக்கும் மங்களங்களைச் செய்வதும் தேஜோலிங்கத்தின் சின்னமுமான இத் தீபத்தை பிரதி தினமும் நமஸ்கரிக்கிறேன்.

ஆத்யந்த ரஹிதோ தேவ : ஸோணதீரி நிலைய : பிரபு :
தேவானுமபி துர்க்ஞே ய : ஜ்யோதி ரூப : ப்ரஸீதது ॥

ஆதியந்தமில்லாத ப்ரகாச ரூபியான அருணசலேஸ்வரர் தேவர்களும் அறியமுடியாத ஜோதி உருக்கொண்டவர். அவர் நமக்கு அருள்பாலிக்கட்டும்.

காமாரி ரருணத்ரீ ஸ : புனர் ஜன்ம வ்ய போஹது
காலாரிர் மரணம் சைவ ஜீவன் முக்தி பிரதாயக : ॥

காமனையும் காலனையும் அழித்த அந்த அருணசலேஸ்வரர் எனக்குப் புனர் ஜன்மத்தையும் மரணத்தையும் தடுத்து ஜீவன் முக்தி அளிக்கட்டும்.

மாதா (அ) பீதகுசாம்பா ச பிதா சோணசலேஸ்வர :
தாவு பௌ குல தீபம் மே தயா பூர்ணௌ ப்ரஸீத தாம் ॥

தாயான அபீதகுசாம்பிகையும் தந்தையான அருணசலேஸ்வரரும் கருணை மிகுந்து எனக்கு குல தீபம் போன்ற நல்ல சந்ததியை அருளட்டும்.

(நன்றி : காமகோடி பிரதீபம்)

ஸ்கந்தகிரி மலையிலும் தீபம்

திருவண்ணாமலை மலை மீது கார்த்திகை தீபம் என்று ஏற்றப்படுகிறதோ அன்றே சேலம் உடையாபட்டி அருகிலுள்ள ஸ்கந்தாஸ்ரம மலையிலும் தீபம் ஏற்றப்படுகிறது. இங்கு ஸ்கந்தனும் அவருக்கு எதிரில் அஷ்டதசாபுஜ மகாலக்ஷ்மியும் கோயில் கொண்டிருக்கிறார்கள். சத்குரு ஸ்ரீ சாந்தானந்த சுவாமிகள் முயற்சியால் ஏற்பட்டு அற்புத ஆலயம் இது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தீபங்களில் தான் எத்தனை வகைகள்!



மின்சார விளக்குகள் மிக முக்கியமடைந்து விட்ட இந் நாளிலும் குத்துவிக்கு சிரஞ்சீவித்துவம் பெற்ற காரணம் அது ஒரு தெய்வமாக வழிபடப்படுவது தான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கஜலக்ஷ்மி போட்ட கைவிளக்குகள் முன்பெல்லாம் கிராம வீடுகளில் சாதாரணமாகக் காணலாம். இவைகளை காமாக்ஷி விளக்கு என்பர். ஆனால் இப்போது குத்து விளக்குகள் மட்டுமே வீடுகள் தோறும் காணப்படுகின்றன. வேலைப்பாடுள்ள குத்து விளக்குகளுக்கு தமிழகம் தான் பேர்போனது. மலையாள குத்து விளக்குகள் மொழு மொழுவென கூர்மையுடைய சிகரத்தைப் பெற்றிருக்கும்.

பாவை விளக்குகள் :—சாதாரணமாக ஆலயங்களில் மட்டுமே காணமுடியும். இதில் ஆண் பாவை விளக்கும் உண்டு. பெண் பாவை விளக்கும் உண்டு. வீடுகளில் அழகாக தீபலக்ஷ்மி பிரதிமைகளை வைத்திருப்பார்களே ஒழிய விளக்கேற்ற அதை உபயோகிக்கமாட்டார்கள். ராணிகள், பணக்கார வீட்டுப் பெண்கள் தங்கள் உருவத்தைப் போன்ற பாவை விளக்குகளைச் செய்யச் சொல்லி தெய்வங்களின் அருகே எப்போதும் விளக்கேந்திக் கொண்டு நிற்கும் புண்ணியத்தைப் பெறுவதற்காக செய்து ஆலயங்களில் வைக்கும் வழக்கம் உண்டு.

புராதனமான தீபலக்ஷ்மி உருவங்கள் அணிந்துள்ள நகைகளும் புராதனமானவையே. அமராவதி சிற்பங்களில் காணப்படும் தலைவகிட்டில் அணியும் சூடாமணி காளிதாசனுல் மேகதூதத்தில் வருணிக்கப்பட்ட அணிகலன்கள் தீபலக்ஷ்மிடம் காணப்படுகின்றன.

விளக்கு வகைகள் குறித்து இவ்விஷயமாக நன்கு ஆராய்ச்சி செய்துள்ள பாலையங்கோட்டை தி. அ. இராகவன் ''தமிழ் நாட்டுத் விளக்குகள்'' என்ற தன் புத்தகத்தில் விளக்குகள் பட்டியல் ஒன்றையே தந்திருக்கிறார். அது வருமாறு.

குத்துவிளக்குகள்—50

சந்திர காந்த குத்துவிக்கு
அன்னை விளக்கு (ஒதிம விளக்கு)
கிளிவிளக்கு (கிள்ளை விளக்கு)
மயில் விளக்கு (மயூரதீபம்)
குயில் விளக்கு
நாகர் ,,
நிலை ,,
சிலை ,,
கம்பி ,,
காய் ,,
தண்டு ,,
குருவி ,,
அகல் ,,
கிளை ,,
புருஷாமிருக ,,
ஒதிமக்கிளை ,,
முக்கிளை ,,
காமாட்சி விளக்கு
மணி ,,
மாயோன் ,,
ஏழுதலை நாக ,,
காமதேனு ,,
சரோருக ,,
மங்கல ,,
பத்மாசன முருகன் ,,
பதும ,,
கஜலக்ஷ்மி ,,
சந்நிதி ,,
கின்னரி ,,
கின்கிணி ,,
கன்னி ,,
காமன் ,,
மூன்றுகிளை ,,
திருமண ,,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தமிழக பாவை விளக்கு. ஆடையும் அணியும் அழகும் சேர்ந்து உருவாக்கப்பட்ட சலிப்படைப்பு

தூக்கு விளக்குகள்—9

வாடா விளக்கு
ஒதிமத்தூக்கு ,,
தூண்டாமணி ,,
ஒதிமநந்தா ,,
கூண்டு ,,
புரு ,,
நந்தா ,,
சங்கிலித்தூக்கு ,,
கிளித்தூக்கு ,,

நம் நாட்டுப் பாவை விளக்கைப் பார்த்து காப்பி அடிக்கப்பட்ட ரோமர் பாவை விளக்கு.

தாரா விளக்கு
ஈழச்சியல் ,,
மலையாண்சியல் ,,
அரை தலை ,,
சோழியச்சியல் ,,
ஆரக்குட ,,
அனந்தலை ,,
எரிக்கக்கட ,,
பகாவோர் ,,
கைவிளை ,,
ஊழ்உறு ,,
குடக்கால் ,,
கடைக் கெழு ,,
மீன்திமில் ,,
ஒழியா ,,
காவலர் ,,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோவில் விளக்குகள்—3

சரவிளக்கு
நிலைவிளக்கு
கிளைத்தட்டு விளக்குகள்

கைவிளக்குகள்—7



கஜலக்ஷ்மி கைவிளக்கு
திருமால் ,,
தாமரைக் ,,
சிலுவை ,,
சம்மனசு ,,
கணபதி ,,
கைவக் ,,

பூஜா விளக்குகள்—9
(நவகண தீபம்)

சர்வ ராட்சத தீபம்
சபூத ,,
பிசாஜ ,,
கின்னர ,,
கிம்புருஷ ,,
கணநாயக ,,
வித்யாதர ,,
கந்தர்வ ,,
பிராஹ் ,,

திக்பாலர் தீபம்—4

ஈசான தீபம்
இந்திர ,,
வருண ,,
யம ,,

ஆலயங்களில் தீபாராதனை தீபங்கள்—16

தூபம்
தீபம்
புஷ்ப தீபம் (பூ விளக்கு)
நாக தீபம்
புருஷாமிருக ,,
கஜ ,,
துயாஜத (குதிரை) ,,
வியாக்ர (புலி) ,,
ஹம்ஸ (அன்னம்) ,,
குப்ப (குடம்) ,,
குக்குட (கோழி) ,,
விருக்ஷ ,,
கூர்ம (ஆமை) ,,
நக்ஷத்திர ,,
பேரு ,,
கற்பூர ,,

இதர தியான தீபங்கள்—38

ஏக முக தீபம்
அன்ன ,,
கிளி ,,



கமல ,,
பிரம ,,
ஷட்கோண ,,
முக்கோண ,,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

13 முக்கோண தீபம்
கண்ணாடி (சாயா) ,,
அஷ்டோத்திர (108) ,,
சகஸ்ர அலங்கார (1000) ,,
சக்தி ,,
பஞ்சோபசார ,,
சப்தமுக ,,
ஏகபாத ,,
துவிபாத ,,
திரிபாத ,,
சதுர்பாத ,,
பஞ்சபாத ,,
ஷட்பாத ,,
சப்தபாத ,,
அஷ்டபாத ,,
நவபாத ,,
சதபாத ,,
நீராஞ்ஜனபாத ,,
நந்தா ,,
சங்கிலி ,,
சர ,,
சற்பூர ,,
கைச்சட்டி ,,

இந்திர விமானப் பூங்கோயில் ,,
வால் ,,
யட்சி ,,
சித்திர ,,
மானுஷ ,,
மூணியட்ச ,,
மயூர ,,
பஞ்ச ராத்திரா ,,

அஷ்டகஜ தீபம்—8

ஐராவத தீபம்
புண்டரீக ,,
குமுத ,,
ஜன ,,
புஷ்பதந்த ,,
சர்வபௌம ,,
சுப்ர ,,
பித்ர ,,

அஷ்ட கன்னித் தீபம்—8

இந்திராணி தீபம்
சுவாஹா தேவி ,,
சாமள தேவி ,,
துர்க்கா ,,
காளி ,,
அஞ்சனை தேவி ,,
சித்ரலேகா ,,
பார்வதி ,,

சப்த மாதர் தீபம்—7

பிராஹ்மி தீபம்
மகேஸ்வரி ,,
கௌமாரி ,,
வைஷ்ணவி ,,
வாராஹி ,,
மாகேந்திரி ,,
சாமுண்டி ,,

விருக்ஷ தீபம் என்பது பல கிலோகளாக ஏராள தீப முகங்களைக் கொண்டு பல அடுக்குகளாக 6 அடி, 8 அடி உயரத்தில் இருக்கும். இதை ஆலயங்களில் மட்டுமே காணலாம்.

கேரள ஆலயங்களில் தூண் விளக்குகளைக் காணலாம். திருவனந்தபுரம், குருவாயூர் கோவில்களுக்குச் சென்றிருப்பவர்கள் இதனைக் கவனித்திருக்கலாம். இந்த கோவில்களில் லக்ஷ தீபம் ஏற்றுவதற்காக அகல்கள் நிரந்தரமாகவே பொருத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டுக் கோவில்களில் முற்காலத்தில் தீபமும் தட்டும் எடுக்கும் உரிமை ஆலயத்தைச் சேர்ந்த தேவதாசிகளுக்கே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உண்டு. இந்த ஏற்பாடு அவர்களுக்கே வழங்கப்பட்ட உரிமையாக இருந்தது.

தீபாராதனை தத்துவம்

தீபாராதனைகளில் தூபம் காட்டுவது முதல் கற்பூர தீபம் இறுதியாக பல தீபங்கள் காட்டப்படுகின்றன.

தீபாராதனை செய்யுமுன்பு மூன்று முறை தீப பாத்திரத்தை எடுத்து இறைவனுக்கு ஆராதிக்க வேண்டும்.

முதல் முறை காட்டுவது லோக க்ஷேமார்த்தம். இரண்டாம் முறை காட்டுவது கிராம க்ஷேமார்த்தம். மூன்றும் முறை காட்டுவது பூதரக்ஷணார்த்தம்.

பாதம் முதல் தலை வரை, தலை, லலாடம், மார்பு திருவடிகள் இவைகளுக்கு ஒங்கார வடிவமாகக் காட்ட வேண்டும்.

இந்த தீபங்கள் பஞ்சபூதங்கள், பிராணன்கள், இந்திரியங்கள் இவைகளின் பிரதிபலிப்புகள்.

இந்த ஒன்று இரண்டு முதலிய தீப ஆராதனையை விளக்கும் மாணிக்கவாசகர் பாடல்.

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தியிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

—போற்றித் திருவகவல்

பாரிடை ஐந்தாய் பரந்தாய்—உலகமே நீயாகி அதில் மெய், வாய், கண், செவி, மூக்கு என்னும் ஐம்புலன்களையும் உடைய ஜீவராசிகளாய் நிறைந்துள்ளாய்.

நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்—நீரின் மூலமாக ரத்தம், சிறுநீர், கண்ணீர், சுக்கிலம் (அல்லது சுரோணிதம்) என்னும் நான்காக விளங்குகின்றாய்.

தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய்—தியாகி அவற்றில் சூரியன், சந்திரன், நெருப்பு என்பன ஆனாய்.

வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய்—காற்றாகி அதில் பிராணன், அபானன் என்ற இரண்டின் மூலம் விளங்குகிறாய்.

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய்—சிதாகாசமாகிய வெட்ட வெளியாகி அதில் இரண்டற்று ஏகமாக நின்றாய்.

இந்த பஞ்ச பூதங்களும் நம் உடலில் அமைந்துள்ளன. பாதமே மண், உந்திவரை நீர், உந்தியிலிருந்து இருதயம் வரை தீ அதற்கு மேல் தோள் வரை காற்று. அதற்கு மேல் வெட்டவெளி யாகிய ஆகாயம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

உரம் அடி மேதினி உந்தியில் அப்புஆம்
விரவிய தன்முலை மேவிய கீழ்அங்கி
கருமுலை மீமிசை மேவிய கைக்கிழிற் காலாம்
விரவிய கந்தர மேல் வெளியாமே

—திருமந்திரம்

ஆகமங்களில் இந்த தீபங்கள் காட்டும் வரிசைகளில் வித்தியாசம் உண்டு.

36 விளக்கு தட்டு தீபம், 108 முக பல தட்டு தீபம் இவை எல்லாம் தத்துவம், அத்துவாக்கள் முதலியவைகளை பிரதிபலிப்பதாகும்.

கற்பூரம் எரிந்து மறைந்து விடுவதுபோல இறைவனிடம் பக்தியில் லயித்து அவனுடனேயே ஒன்றிவிட வேண்டும் என்பதே கற்பூர ஆரத்தித் தத்துவம்.

ஆலயங்களில் தீப ஆராதனை

ஆலயங்களில் சுவாமி சந்நிதியில் தீப ஆராதனை செய்யப்படுவதைக் கவனித்திருக்கலாம். முதலில் தூபம் காட்டப்படும். அதில், தசாங்கம், சாம்பிராணி, குங்கிலியம். இவைகளைப் போட்டு தூபம் காட்டப்படும். இத்தூபம் சூழ்நிலையை சுத்தப்படுத்தும். நன்மணம் கமழும்.

ஒரு சிவனடியார் திருக்கடவூரில் குங்கிலியத்தை வாங்கி இறைவனுக்குத் தூபம் காட்டுவதையே தன் நித்யக் கடமையாகக் கொண்டிருந்தார். இதனால் இவருக்கு குங்குலியக் கலயநாயனார் என்றே பெயர். இந்த தூப புகையின் மகிமை திருஷ்டி தோஷத்தை நீக்கும். சில முஸ்லிம் பக்கிகள் இம்மாதிரி தூபம் போடுவதைப் பார்த்திருக்கலாம். திருவையாற்றில் ஆட்கொண்டார் சந்நிதியின் முன்பு தீபக்குண்டத்தில் எப்போதும் நெருப்பு இருந்துக்கொண்டே இருக்கும். அதில் குங்குலியம் வாங்கிப் போடுவது இப்போதும் நடைபெறுகிறது.

பின் ஒரு முகமுள்ள தீபம், பின் இரண்டு, மூன்று, ஐந்து, ஆறு, ஏழு முகமுள்ள தீபங்கள் காட்டப்படும். இதன் தத்துவம்: ஒன்றேயான இறைவன் இரண்டு மூன்று இம்மாதிரி விரிந்து பின் மீண்டும் ஒன்றுகிறது எனபதை விளக்குகிறது. மீண்டும் ஒன்றுவதைக் காட்டுவதுதாம் கும்ப தீபம்.

பின்னர் ஒரு தட்டில் வட்டமாக 25 தீபங்கள் இருப்பது காட்டப்படும். இது 25 தத்துவங்களைக் குறிக்கிறது.

ஒரு பொழுதும் காரியமாகாமல் எப்போதும் காரணமாகவே இருக்கும் பிருத்வி தத்துவம், காரியமாகவும் காரணமாகவும் ஆகும் இயல்புடைய மஹத்தத்துவம், அஹங்காரத் தத்துவம், ஸ்பர்சம்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சப்தம், ரூபம், ரஸம், கந்தம் எனப்படும் ஐந்து தன்மாதீதிரை களான ஐந்து தத்துவங்கள் ஆக எட்டு, ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்து ஆக 23 தத்துவங்கள். இவை எப்போதும் காரியமாகவே இருப்பவை. ஒன்றிற்கும் காரணமாகவோ காரியமாகவோ இல்லாமல் பந்தம், மோக்ஷம் இவைகளை அனுபவிக்கும் ஜீவாத்மா ஒரு தத்துவம். இதற்குமேல் பரமாத்மா ஆக இந்த 25 தத்துவங்கள் நீயே என்று காட்டுவது இந்த தீபாராதனைத் தத்துவம். இதைத் தான் ''தத்வானும் பரமம் தத்வம்'' என்கிறார்கள்.

பல தட்டுகளில் 96 முகம் இருக்கும். இது மொத்த தத்துவங்கள் 96ஐ குறிக்கின்றன. பின் ஐந்து தட்டுகளில் தீபம் ஏற்றி அதற்கு தூப தீபம் காட்டி பின் ஒவ்வொன்றாக எடுத்து தீபாராதனை செயயப்படும். இது பஞ்ச பூதங்களைக் குறிக்கும். இறைவன் பஞ்ச பூத ஸ்வரூபமாக இருக்கிறார் என்பதை இது உணர்த்துகிறது. எல்லாம் ஆன பின் கற்பூர நீராஞ்சனம் காட்டப்படுகிறது.

மாவிளக்கு

அம்பிகைக்கு ஆடி, தை வெள்ளிக்கிழமைகளில் மாவிளக்கு ஏற்றுவது சுமங்கலிகள் செய்ய வேண்டிய முக்கிய வழிபாடாகும். ஆலயத்தில் தேவி சந்நிதியிலோ அல்லது வீட்டில் பூஜாகிரகத் திலோ ஏற்றப்படும். அரிசி மாவுடன் வெல்லம் நெய போட்டுக் கலந்து நடுவில் குழிவிட்டு அதில் நெய் ஊற்றி விளக்கேற்றுவது வழக்கம். விளக்கு ஏற்றியதும் அம்பிகை அதில் பிரசன்ன மாகிறாள்.

விளக்கு எரிந்து அணையும் சமயத்தில் அம்பிகை மலை ஏறிவிட் டாள் என்று சொல்வதுண்டு. பின்பு நைவேத்யம் செய்து கற்பூர ஹாரத்தி காட்ட வேண்டும். சிலர் ஒரு விளக்கு மட்டும் ஏற்றுவர். சிலர் இரண்டு ஏற்றுவர். (இரண்டு ஏற்றுவது சிவ சக்தி அம்சங் களைக் காட்டுவதாகும்.)

மங்கள ஹாரத்தி

வீடுகளிலுள்ள பூஜைகளில் மங்கள ஹாரத்தி மிக முக்கியம். இதற்கு மங்களார்த்திகம என்று பெயர்.

ஒரு பெரிய தட்டில் குங்குமம், சந்தனம் இவைகளால் அஷ்ட தளம், ஷட்தளம், சதுர்தளம் இவைகளில ஒன்றுன தாமரைப்பூ வரைந்து, கடலை அல்லது பயறுகளை சந்திரனைப் போன்ற வடிவங்களில் தளங்களில் பரப்பில் அரிசி மாவில் பால் சர்க்கரை சேர்த்து உருண்டையாக்கி அதனை உரல்போல வடிவ மாக்கி அவ்வுரலின் மேல்பாகம் முக்கோண வடிவமாகவும் அதில் நெய்விட்டு 5, 7, 9 என்ற எண்ணிக்கைகளில் தீப அகல் அமைத்து கற்பூரம் சேர்ந்த திரியிட்டு விளக்கேற்றிக் காட்டுவதாகும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

6

வாழ்க்கையில் ஒன்றிவிட்ட தீபம்

வாழ்க்கையை நடத்த இன்றியமையாத சாதனங்களில் மிக முக்கியமான இடம் பெற்றிருப்பது விளக்கு. அஸ்தமித்து இருள் கவ்விவிட்டால் விளக்கு இல்லாமல் எந்த காரியமும் நடைபெறுது.

பிரசவ அறையிலும் விளக்கு இடம் பெறுகிறது. மின் விளக்கு இருந்தாலும் ஒரு மூலையில் தீபம் இடம் பெற்றிருக்கும். அந்த மாதிரி ஆவி பிரிந்த பின்பு சவத்தின் தலைப்பக்கம் ஒரு விளக்கு ஏற்றி வைக்கப்படும். விவாகத்தின்போதும் விளக்கு முக்கிய இடம் பெறுகிறது.

பிரசவ அறையில் வைக்கப்படும் விளக்கின் ஒளி தாயின் முகத்தில்பட்டு குழந்தையின் முகத்தில் பிரதிபலிக்கும்படி வைக்கப்பட வேண்டும் என்று ஆயுர்வேதம் கூறுகிறது. எப்படி பூமி சூரியனிடமிருந்து கிரணங்களைப்பெற்று சந்திரனுக்கு கொடுக்கிறதோ அம்மாதிரி என்று இதற்கு உதாரணமும் கூறுகிறது அந்த சாஸ்திரம்.

பண்டைக்கால விளக்குகளில் இத் தீபங்களை வைக்கவே தனி மாடங்கள் அமைக்கப்பட்டிருக்கும். வாயிற்படியின் இருபுறங்களில் இத் தீப மாடங்கள் கட்டாயம் இருக்கும்.

கிராமப்புறங்களில் பசு மாடுகள் மேய்ந்துவிட்டு அஸ்தமிக்கும் நேரத்தில் வீடு திரும்பும். பசு லக்ஷ்மி ஸ்வரூபமானதால் அவை வருவதற்கு முன்பே தீபம் ஏற்றிவிடுவது வழக்கம்.

இந்த விளக்குகளில்தான் எவ்வளவு வேலைப்பாடுகள். ஹம்சம், கிளி, மயில், இவைகளை எல்லாம் விளக்கின்மேல் அமைத்து அபூர்வ வேலைப்பாடுகளுடன் விளங்கும்.

மொகலாய சக்கிரவர்த்தி அக்பர் ஒவ்வொரு விளக்குமே தெய்வீக ஒளியின் அம்சம் என்று கருதினார். வேத காலத்தில் அக்னி எப்போதுமே அணையாது பாதுகாக்கப்படும். அணையாமல் அதைக் காப்பது குடும்பத் தலைவியின் முக்கிய கடமைகளில் ஒன்று. அக்பர் தன் அரண்மனையில் இந்த வேத கால வழக்கத்தைப் பின்பற்றி அக்னியை அணையாமல் காத்துவர ஏற்பாடு செய்தார் என்று அபுபைஸல் எழுதிய 'அயீன் அக்பரி' கூறுகிறது.

தீப தானம்

ஏற்றிய தீபத்தை தானம் அளிப்பது பத்துவித முக்கிய தானங்களில் ஒன்றாகும். இறந்தவர்களின் ஆவி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நற்கதியடைய இந்த தானம் கொடுக்கப்பட்ட விளக்கின் ஒளி வெளிச்சம் காட்டுகிறதாம்.

முன் காலத்தில் இந்த தீப தானத்தை சூரிய உதயத்திற்கு முன்பே தரவேண்டும் என்ற நியதி பின்பற்றப்பட்டு வந்தது. யமன் இந்த தீப தானத்தினால் மிகவும் திருப்தியடைகிறான் என்று சொல்லப்படுகிறது.

தென்னிந்தியாவில் 16 வித தீப தானங்கள் இருந்ததாக ஒரு கல்வெட்டு கூறுகிறது. பனை ஓலையில் படகு மாதிரி செய்து அதில் தீபம் ஏற்றி தானம் செய்வது அதில் ஒரு முறை. கங்கைக்கரையில் தீப தானம் அளிப்பது மிகவும் விசேஷம்.

கங்கையில் அகலில் தீபத்தை ஏற்றி அதை மிதக்க விடுவது இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது.

தீப நடனங்கள்

தீபத்தை வைத்துக் கொண்டு நடனம் செய்வது வட நாட்டிலும் கேரளத்திலும் அதிகம். கேரளத்தில் ஒரு பிரபல ஸ்தரை வரவேற்க இரு பக்கங்களிலும் வரிசையாக பெண்மணிகள் தீபமேந்திய தட்டுகளை ஏந்தி ஹாரத்தி எடுப்பதை இன்றும் காணலாம். ஓணத்தன்று தீப வரிசை வைப்பது அவர்கள் வழக்கம்.

உத்தர பிரதேசத்தில் மதுரா அருகில் கண்ணன் விளையாடிய இடங்களில் தீபத்தட்டுகளை ஏந்தி நடனம் ஆடுவது இன்றும் வழக்கத்தில் இருக்கிறது. ஹோலி பண்டிகைக்குப்பின் இப்படி தீபங்களை ஏந்தி நடனம் ஆடுகிறார்கள். இதற்கு சாரகலா நடனம் என்று பெயர்.

தலையில் கும்பத்தின் மீது ஒரு விளக்கையும் இரு கைகளில் இரு விளக்குகளையும் வைத்துக்கொண்டு நடனமாடுவது பயிர் விளைச்சலைப் பெருக்கும் என்ற நம்பிக்கை வடநாட்டு விவசாயிகளிடையே இருந்து வருகிறது.

பஞ்சாபில் ஆடப்படும் தீப நடனத்தின் பெயர் ஜாகோ. இது திருமணங்களின்போது மட்டுமே ஆடப்படும். திருமணமான ஒரு பெண்மணியே தலையில் கலச விளக்கை வைத்துக்கொண்டு ஆட வேண்டும்.

குஜராத்தின் பிரபலமான காரிபா நடனமும் விளக்கு ஏந்தி ஆடும் ஆட்டமே. ஒரு பானையில் பல ஓட்டைகள் இருக்கும். அதற்குள் விளக்கு எரியும். இம்மாதிரி பல பானைகளை தலையில் கொண்டு பல பெண்மணிகள் சேர்ந்து ஆடும் ஆட்டம் இது.

தீபக் ராகம்

சங்கீதத்தில் எவ்வளவோ ராகங்கள் உண்டு. சில மிக சக்திவாய்ந்தவை. மேக ராகம் பாடினால் மேகங்கள் குவிந்து மழை பொழியும். தீபக் ராகம் பாடினால் ஒளி தோன்றும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இந்த தீபக் ராகத்தை மிகத் திறமையுடன் கையாண்டவர் தான்ஸென். இவர் அக்பர் காலத்தில் மிகப் பிரபலமான சங்கீத வித்வானாக விளங்கியவர்.

இவர் பிறப்பில் ஹிந்து. முகம்மது கௌஸ் என்ற முஸ்லிம் மகான் சில மூலிகைகளின் உதவி கொண்டு இவருக்கு பேசும் சக்தி வரும்படிச் செய்தார். பிருந்தாவனத்தில் வசித்த சுவாமி ஹரிதாஸிடம் இவர் சிஷ்யராக இருந்து சங்கீதம் கற்றார். ஒரு நாள் பிருந்தாவனக் காட்டில் ஒரு மரத்தில் ஜோதி தெரிந்து தெரிந்து மறைந்ததை இவர் கண்டார். அதைப்பற்றி தன் குருவினிடம் கேட்டார்.

அவர், ''குயில்கள் பாடும்போது தீபக் ராகத்தின் தீவனியை வெளியிட்டிருக்கும். அப்போது ஜோதி தோன்றியிருக்கும். அந்த தீவனி நின்று போயிருக்கும்போது ஜோதி மறைந்திருக்கும். இதைத் தவிர வேறு ஒன்றுமில்லை'' என்றார்.

தனக்கு அந்த ராகத்தை கற்பிக்க வேண்டும் என்று கேட்கவே ஹரிதாஸும் தான்ஸெனுக்கு அதைக் கற்பித்தார். இந்த ராகத்தை அவரைத் தவிர வேறு யாரும் பாடியதாகத் தெரியவில்லை. முத்துஸ்வாமி தீக்ஷிதர் அவர்களுக்கு இந்த ராகங்கள் எல்லாம் தெரியும்.

தான்ஸேனுக்குப் போட்டியாக ஒரு வித்வான் சவால்விட்டார். அக்பர் தர்பாரில் தான்ஸென் தீபக் ராகத்தை பாடி தர்பாரிலுள்ள விளக்குகளை எல்லாம் ஏற்றி அந்த விதவானை தோற்கடித்து வெற்றி கண்டார். அக்பருக்கும் அவருடைய மனைவிகளில் ஒருவரான தௌலதாபாத் பீகத்திற்கும் பிறந்த மேகருன்னிஸாவை தான்ஸென் காதலித்து மணந்தார்.

இந்த தீபத்தின் பெருமையை கூறுத புலவர்களோ கவிகளோ இல்லை என்றுகூடச் சொல்லலாம்.

சமஸ்கிருத இலக்கிய உலகில் காளிதாஸனே தீபத்தின் சுடர் என்று வருணிக்கப்படுகிறான். இவர் தீப ஒளியை பல இடங்களில் உபமானமாகக் குறிப்பிடுகிறார்.

ரகு வம்சத்தில் இந்துமதியின் சுயம்வரக் காட்சி. அழகே உருவான இந்துமதி தன் கையில் மாலையுடன் யாருக்கு மாலையிடலாம் என்று ஒவ்வொரு அரசராகப் பார்த்துக் கொண்டே வருகிறாள். ஒரு ஜோதி அசைந்து வருவதுபோல அவள் வருகிறாளாம். அவள் அருகில் வந்ததும் தனக்குதான் மாலை போடப் போகிறாள் என்ற எண்ணத்தில் அவள் முன்புள்ள மன்னன் முகம் பிரகாசிக்கிறது. அவள் மாலை போடாமல் அகலவே ஏமாற்றத்தால் அம்மன்னன் முகம் இருளடைகிறது. ஜோதியாகிய இந்துமதி எதிரே இருக்கும்போது அவள் முன் உள்ளவர் முகத்தில் பிரகாசமும் அந்த ஜோதி அகன்று விடவே இயற்கையாக

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இருள் சூழும் என்பதை காளிதாஸன் இங்கு மிக அழகாக வருணிக்கிறார்.

மேகதூதத்தில் யக்ஷன் அந்தப்புர சயன அறையில் உள்ள விளக்குகளை 'நக்ஷத்திர விளக்குகள்' என்று வருணிக்கிறான்.

ஞானேஸ்வரர் என்ற மகான் ''பாவார்த்த தீபிகா'' என்றொரு நூலை எழுதியிருக்கிறார். இதில் தீப மகிமையைக் குறிப்பிட்டிருக்கிறார்.

விஜயநகரக் கவி, ஸ்ரீவித்யாரண்யர் தன் 'பஞ்சதசி' நூலில் ஒவ்வொரு அத்யாயத்திற்கும் ஞான தீபம், தியான தீபம் என்று தீபத்தைக்கொண்ட பெயர்களையே அமைத்திருக்கிறார்.

வால்மீகி இலங்கையைக் குறிப்பிடும்போது இலங்கையை 'ரத்ன தீபம்' என்று வர்ணிக்கிறார்.

இந்த உடலிலுள்ள ஆத்மாவே ஜோதிர் மயமாக விளங்குகிறது என்று வேதம் உபநிஷத்துகள் கூறுகின்றன. அது கட்டை விரல் பிரமாணத்தில் இருதயத்தில் விளங்குகிறது என்பதை தஸ்ய மத்யே வஹ்னி சிகா அநியோர்த்வா என்ற வேத வாக்யம் கூறுகிறது.

ஸ்காந்த புராணத்தில் அக்னி, சூரியன், சந்திரன் இவற்றை விட இத்த தீபமே மிகச் சிறந்தது என்று கூறும் சுலோகமுள்ளது.

தீபம் ஏற்பட்டது முதல், நாகரிகத்தில் புதிய அத்யாயம் ஆரம்பமாயிற்று. ஆகவே இதை தீபயுகம் என்றே அழைக்கலாம்.

தீபத்துடன் பிரதக்ஷிணம்

தீபத்தை எடுத்துக்கொண்டு பிரதக்ஷிணம் வருவதில் பெரும் புண்ணியம் உண்டு. கன்னிப்பெண்கள் இப்படி தீபத்துடன் பிரதக்ஷிணம் செய்தால் அவர்களுக்கு சீக்கிரமே திருமணம் நடைபெறும்.

தபோவனம் ஸ்ரீ ஞானானந்த ஸ்வாமிகள் மடத்தில் இந்த வழக்கம் தினமும் பின்பற்றப்பட்டு வருகிறது. பொழுது புலருமுன் ஒரு கன்னிப்பெண் ர முகம் ஏற்றிய தீபத்தை கையில் ஏந்திவர அவர்களுடன் எல்லோரும் ''தீப ஜோதியே வருவாய்'' என்று பாடிக்கொண்டு ஆஸ்ரமத்தை வலம் வருவது என்றுமே மறக்க முடியாத அனுபவமாகும். அந்த பிரும்ம முகூர்த்த வேளையில் இந்த பாட்டைப் பாடிக்கொண்டு அல்லது கேட்டுக்கொண்டு வருவதிலுள்ள ஆனந்தம் அதை அனுபவித்தவர்களுக்கே தெரியும். (இந்த 'தீப ஜோதி' பாடல் இப்புத்தகத்தில் முன்புறம் அச்சிடப்பட்டுள்ளது.)

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆத்மஜோதி தரிசனம்

மேலே நிலத்தில் மேதகு பெண்ணே
மூல நிலத்தில் மூளுத்தெழுச் சோதியே
ஏல வெழுப்பி யிசைந்து சந்திக்க
பாலரு மாவார் பார் நந்தி ஆணையே.

''வெளிச்சம் வந்தால்தான் எல்லாம் புலனுகிறதே! இந்த ஒளி எங்கிருந்து வந்தது?''

''சூரியனிடமிருந்து.''

''சூரியன் இல்லாத இரவில்?''

''சந்திரனிடமிருந்து.''

''சூரியனும், சந்திரனும் இல்லாதபோது.''

''நெருப்பிலிருந்து.''

''சூரியன், சநதிரன், அக்னி இல்லாதபோது?''

''வாக்கிலிருந்து'' (இருள் சூழ்ந்த அறையில் ஆளைத் தெரியாவிட்டாலும் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்ளலாம் அல்லவா?)

''பேச்சுக்கும் இடமில்லை. அப்போது?''

''ஆன்மாவின் ஒளிதான் உண்மை ஒளி.''

(இந்த சம்பாஷணை ஜநகருக்கும், யாக்ஞவல்கியருக்குமிடையே நடைபெற்றது. கேள்வி கேட்டவர் ஜநகர். பதில் சொல்பவர் யாக்ஞவல்கியர்.)

உண்மையில் இந்த ஆன்ம ஒளி தான் மனிதனை இயங்கச் செய்கிறது. இந்த ஒளியைக்கொண்டே மற்ற ஒளிகள் பிரகாசிக்கின்றன. இந்த ஒளியில்லாவிட்டால் மற்ற எந்த ஒளி எவ்வளவு பிரகாசித்தாலும் பிரயோஜனமில்லை.

ஞானம் வரும்வரை வெளி உலகம் இருள் சூழ்ந்ததுதான். ஞானமாகிய அறிவு தானுகப் பிரகாசிப்பதே ஞானஜ்ஜோதி.

உலகில் எல்லோரும் விரும்புவது எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்று. இந்த ஆனந்தத்தை அனுபவிப்பது நமது பிறப்புரிமை. ஆனுல் இது நமக்கு கிடைக்காமல் இருக்கிறதே ஏன்?

நம் ஒவ்வொருவரிடத்திலும் 'ஆத்மா' என்பதொன்று இருக்கிறது. அதுதான் அநித்யமான இந்த சரீரத்துள் சரீரியாக இருந்துக்கொண்டு நம்மை இயங்க வைக்கிறது. இந்த ஆத்மா சுபாவத்திலேயே ஆனந்தமயமானது. ஆனுல இந்த ஆனந்தம் அடர்ந்த ஓர் இருளில் மறைந்திருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரமாத்மா ஒரே சுடர் வடிவமானது. அதிலிருந்து சிறிய நெருப்பு பொறிபோல் கிளம்புவது போல ஜீவன் கிளம்பிற்று. ஆனால் அது எப்போது கிளம்பிற்று என்று கண்டறிய முடியாது. அதை அறிவதாலும் யாதொரு பயனுமில்லை.

நம் உடலில் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது. அது உள்ளவரை நாம் எல்லா காரியங்களையும் செய்கிறோம். அது அகன்றால் சவமாகிறோம். உடல் அழுகி துர்நாற்றம் எடுக்கிறது. அந்த சக்தியே ஜீவன். அது உள்ள இடம் நம் இதயகமலம். அது உள் நாக்கிலிருந்து 12 அங்குலத்திற்கு கீழே இருக்கிறது. அந்த ஹிருதயத்தாமரை மொக்கில் சுத்த ஆகாசம் இருக்கிறது. அதில் ஜ்வாலா மயமான ஒளியிருக்கிறது. மிக மெல்லிய கம்பிபோல, பிரகாசிக்குமிடத்திலுள்ள ஸூக்ஷ்மமான பொறியே ஜீவன் என்று வேதம் கூறுகிறது. இதை உபநிஷத்துகளும், பிரும்ம ஸூத்திரமும் அதன் பாஷ்யமும் ஆதரிக்கின்றன.

இந்த ஜீவனை 'ஆத்மா' என்று கூறுகிறோம்.

இந்த உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிற நாம் எத்தனையோ காரியங்களைச் செய்து வரவேண்டியிருக்கிறது. ஆனால் இந்த உலக வாழ்க்கையின் பெரும் பகுதி துக்க மயமாக இருக்கிறது. இருந்தாலும் இந்த வாழ்க்கையில் அவ்வப்போது இந்த ஆனந்தத்தின் சிறு சிறு துளிகளை நாம் பெறுகிறோம்.

இருள் அகன்றுவிட்டால் அந்த இருட்டினால் ஏற்பட்ட கஷ்டங்கள் அகன்று போகும். அப்படி அகன்று போவதற்கு வெளிச்சம் தேவை. சம்சாரம் என்னும் அந்தகாரச் சுழலில் சிக்கிக்கொண்டிருக்கிற நமக்கு வெளிச்சத்தை அருளக்கூடியவன் ஒருவர் இருக்கிறார். அவரே சர்வேஸ்வரன்.

ஞான தீபம்

ஞானத்தை வெளிச்சத்துக்கும் அக்ஞானத்தை இருட்டுக்கும் ஒப்பிட்டுச் சொல்வது வழக்கம். பகவான் இப்படியே கீதையில் கூறுகிறார்.

தேஷாமே வானுகம் பார்த்த மஹமக்ஞானஜம் தமஃ |
நாசயாம் யாத்மபாவஸ்தோ ஞானதீபேன பாஸ்வதா ||

"நான் அருளால் இரங்கி அந்தக்கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ்ஞான சுடர் விளக்கால் அஞ்ஞானத்தால் உதித்த இருளை அகற்றி விடுகிறேன்."

அன்பர்களது உள்ளத்தில் நீங்காது குடியிருந்து அவர்கள் நன்மையடைய வேண்டும் என்று கருதுவது இறைவனின் கருணையாகும். அவர் ஏற்றி வைக்கும் ஞான தீபத்தின் தத்துவங்களாவன :

விவேகம் அந்த விளக்கின் உருவமாகிறது. பக்தியினின்று வரும் மனத்திருப்தியே அதற்கு எண்ணெய். விஷக் காற்றில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

விளக்கு எரியாது. ஆழ்ந்த ஈஸ்வரத் தியானமே இவ்விளக்கை எரிப்பதற்கான தூயக் காற்று ஆகிறது. தடைப்படாத பிரும்மசரிய விரதத்தால் வளரும் பிரக்ஞை இதற்குத் திரியாகிறது. ஒய்வடைந்த அந்தக்கரணமே இதற்கு அகலாக அமைகிறது. பெருங்காற்று வீசி தீபத்தை அணைத்துவிடலாகாது. விருப்பு வெறுப்பற்ற தெளிந்த மனது அதற்கேற்ற வீடாக அமைகிறது. தங்குதடையற்ற ஒருமுக தியானத்திலிருந்து உதிக்கும் நிறைக்காட்சியே இத்தீபத்தின் ஒளிப்பிழம்பாகும். இதுவே பக்தனது உள்ளத்தில் ஏற்றி வைக்கப்பட்டிருக்கும் ஞான தீபமாகும்.

''கையில் பேட்டரி கூட் (டார்ச்) உள்ளவன் இருட்டில் எவர் மீது படும்படி வெளிச்சத்தை திருப்புகிறானே அவரை அவன் பார்க்கக் கூடும். ஆனால் அந்த விளக்கை அவன் தன்மீது திருப்பாத வரையில் அவனை ஒருவராலும் பார்க்க முடியாது. அதுபோல ஈஸ்வரன் எல்லோரையும் பார்க்கிறான். ஆனால் அவன் கருணை மூலமாக தன்னைத் தோற்றுவிக்கும் வரை அவனை ஒருவராலும் காண முடியாது'' என்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் தன் உபதேசத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அஹம் பிரஹ்மாஸ்மி

ஞான தீபம் என்பது அஹம் பிரஹ்மாஸ்மி என்பது போன்ற மகா வாக்கியங்களினால் அறிவிக்கப்பட்ட அந்தக்கரணத்தின் பரிணுமமேயாகும்.

தீபத்தை நாம் ஏற்ற வேண்டியதுதான். இருட்டிலுள்ள பொருள்கள் எல்லாம் நம் கண்களுக்குப் புலப்படுகின்றன. ஆனந்தமயமான ஆத்மாவை மூடிக்கொண்டிருக்கும் அக்ஞானத்தை இதே போல் ஞானம் அகற்றிவிடுகிறது. இதிலிருந்து ஞான தீபத்தின் வெளிச்சத்தில் புதிய பொருள் எதுவும் சிருஷ்டியாவதில்லை என்பதும் ஏற்கனவே மறைந்து கிடந்த பொருள்கள் தான் வெளிப்படுகிறதென்பதும் உண்மையாகின்றன.

பிரஹ்மமே ஆனந்தமயமானது தான். நாம் ஒவ்வொருவரும் உண்மையில் பரப்பிரும்ம ஸ்வரூபமாகவே இருக்கிறோம். ஜீவாத்மா பிரும்மமாக இருக்கிறதென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

மாயை மிக சக்தி வாய்ந்தது. நமது சுயத் தன்மையை அறிந்துக்கொள்ளாமல் செய்துவிடுகிறது. அப்படி அறிந்துக்கொள்ளாமல் இருப்பதுவே அக்ஞானம் என்கிற இருட்டு. அதாவது நமது சுயத்தன்மையை அறிந்துக்கொள்ள ஞானதீபம் உதவுகிறது.

பிரஹ்மானுபவம்

ஜீவாத்மா பரமாத்மா ஐக்யத்தையே பிரஹ்மானுபவம் என்கிறோம். தீப பூஜைகளிலுள்ள மந்திரங்களைக் கவனித்தால் நம் ஹிருதயத்திலுள்ள ஜீவன் அல்லது ஆத்மா என்ற ஜோதியை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மானஸீகமாக நாம் பூஜை செய்யும் விளக்கில் 'ஆவாஹிதோ பவ' 'ஸ்தாபிதோ பவ' என்று ஆவாஹனம் செய்கிறோம். பூஜை முடிந்த பின்பு அந்த ஜோதியை மீண்டும் நம் ஹிருதயத்தில் சேர்ப்பிக்கிறோம். ஜீவாத்மாவாகிய உள்ஜோதி பரமாத்மாவாகிய ஜோதியை நாடி பேறு பெறுவதே இந்த பூஜை வழிபாடுகளின் தத்துவம்.

மரத்தில் அக்னி கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கிற தென்பதைப் பார்த்தோம். அதேபோல அக்னி அங்குஷ்ட (கட்டை விரல்) பரிமாண அளவில் ஒவ்வொருவர் ஹிருதயத்திலும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. இறைவனே இந்த ரூபத்தில் உடம்பில் உறைவதால்தான் 'உன் உடம்பை சாணியும் வைக்கோலும் குப்பையும் கூளமுமுள்ள மாட்டுக் கொட்டகை யாக வைத்திராதே. நன்கு மெழுகி கோலம் போட்ட பரிசுத்த மான ஆஸ்ரமமாக வைத்துக்கொள்' என்று மகான்கள் உபதேசித் திருக்கிறார்கள்.

இந்த ஹிருதய அக்னியின் ஒரு அம்சம் வயிற்றில் ஜாடரா க்னியாக இருந்து நாம் உண்ணும் ஆகாரங்களை ஜீரணிக்க உதவு கிறது. ஹிருதய அக்னியின் மற்றொரு அம்சம் மூளையில் நன்கு செயல்பட உதவுகின்றது. இவை மூலம் வயிற்றுப் பசியும் அறிவுப் பசியும் அடங்குகின்றன.

ஆத்ம ஜோதி தரிசனத்திற்கு முதல் படி, கோபம், துக்கம் இவை எல்லாவற்றையும் அகற்ற வேண்டும்.

கோபம் கொள்ளும்போது உடம்பில் ஒருவித சூடு ஏறுகிறது. அதன் விளைவாக ரத்தத்தில் பழுப்பு நிற வண்டல் ஏற்படுகிறது. இது விஷத்திற்கு சமானம்.

துக்கம் ஏற்பட்டால் ரத்தத்தில் சாம்பல் நிறமான வண்டல் ஏற்படுகிறது. இதுவும் விஷத்திற்கு சமானம். ஆகவே கோபத் தையும் துக்கத்தையும் தவிர்க்க வேண்டும்.

அடுத்தபடியாக நிலையற்ற பொருள்களில் நிலையற்ற வைராக்யம். ''நான்'' என்னும் உணர்வுக்கு ஆதாரமானதும் இயற்கையாக என்றும் உள்ளதுமான பிரும்மம் ஒன்று இருக் கிறது. விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளுக்கும் சாக்ஷியாக இருந்துக்கொண்டு பிராணமயம் முதலிய ஐந்து கோசங்களுக்கும் வேறாக உள்ளது.

கேட்பதைவிட சிந்திப்பது நூறு மடங்கு சிறந்தது. சிந்திப்பதைக்காட்டிலும் ஆத்ம தத்துவத்தை உணர்ந்து சித்தத்தில் நிலைநிறுத்துவது லக்ஷம் மடங்கு சிறந்தது.

ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப் பெற்ற (அத்ம ஜோதி தரிசனத்தைக் கண்ட) சிஷ்யன் தன் குருவினிடம் பின்கண்டவாறு கூறியதாக ஸ்ரீ ஆதிசங்கரர் தன் 'விவேக சூடாமணி'யில் குறிப்பிட்டிருக்கிறார்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"பிரும்மமும் ஆத்மாவும் ஒன்றேயாகி விட்டபோது புத்தியானது காணுமல் போய் விட்டது. செயலின் முனைப்பு கரைந்துவிட்டது. அளவுகடந்த இன்பம் இருப்பதை உணர்கிறேன். அதைச் சொல்லால் வர்ணிக்க இயலவில்லை. மனதால் நினைப்பதற்குகூட முடியாது. அளவு கடந்த பெருமை வாய்ந்த ஆனந்தமானதும் அழிவற்றதுமான ஆத்ம தத்துவத்தை அடைந்தவன் ஆனேனே அந்த குருவுக்கு நமஸ்காரம் (இதுவே 'விவேக சூடாமணி'யின் சாரம்)

விஞ்ஞான நௌகா

(ஆதிசங்கரர் தன் "விஞ்ஞான நௌகா"வில் கூறியுள்ளதாவது: பிரும்மம் ஆனந்த ரூபம் பிரகாச வடிவமானது. நானே அந்த பிரும்மம் என்ற ஒயாத தியானத்தால் மட்டுமே அடையத்தக்கது. (3-வது சுலோகம்.)

அந்த ஆத்ம சுவரூபத்தை அறிந்ததால் தான் உலகம் சத்யமாகத் தோன்றுகிறது. பந்தமில்லாத அந்த பிரும்மமே நான் என்று சதா நினை. (4-வது சுலோகம்)

உபநிஷத்துக்கள் "நேதி நேதி" என்று இது ஆத்மாவல்ல என்று எல்லாவற்றையும் தள்ளுகிறது. மூன்று அவஸ்தைகளைக் கடந்து நான்காவது ஒன்றுக நிற்பதே ஆத்மா. (5-வது சுலோகம்)

"பரம் பிரஹ்ம நித்யம் ததேவா அஹமஸ்மி" என்று ஒவ்வொரு சுலோகத்திலும் நான்காவது அடியாக அமைந்துள்ளது.

ஜோதியில் மறைந்தவர்கள்

பல மகான்கள் ஜோதியில் கலந்துள்ளனர் என்றாலும் அவர்களில் முக்கியமான சிலரைப் பற்றிக் குறிப்பிட வேண்டும்.

தீயில் பிரவேசம் செய்து தில்லை வெளியில் கலந்து விட்டவர் நந்தனார். இவருக்கு இறைவன் ஏன் இவ்வழியை ஏற்படுத்தினார் என்ற தத்துவம் "ஸ்ரீ நடராஜ தத்துவம்" என்ற பிரதிபா பிரசுரத்தில் விளக்கப்பட்டுள்ளது.

ஜோதியில் மறைந்தவர்களில் குறிப்பிட வேண்டியவர்கள் ஸ்ரீ மாணிக்கவாசகரும், ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரும். இருவரும் சிதம்பரத்தில் இறைவனுடன் மறைந்தவர்கள்.

திருமண ஜோதி

எல்லோரும் தன் வரையில் இறைவனுடன் ஐக்யமானவர்களே. தான் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டும் என்பதற்காக தன் திருமணத்திற்கு ஆச்சாள்புரத்திற்கு வந்திருந்த எல்லோரையுமே இறைவன் இறைவி அருளால் ஞானவான்களாக்கி அவ்வளவு பேரையும் முதலில் ஜோதியில் நுழையச் செய்து கடைசியில் தானும் தன் மனைவியுமாக ஜோதியில் மறைந்தவர் திருஞானசம்பந்தர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஞானசம்பந்தர் மனது திருமணத்திற்கு இசையாதபோதும் பெரியோர் வற்புறுத்தலுக்காக சம்மதம் தெரிவித்தார். நம்பியாண்டார் நம்பி மகளை மணம் பேசி திருமணம் ஏற்பாடாயிற்று. முடிவில் வேள்வித் தீயை வலம் செய்ய வேண்டி வந்தபோது ''வேள்வித் தீயாக இருப்பவன் சிவபெருமானே. அவனையே வலம் வருவேன்'' என்று ஆலயத்திற்குச் சென்றார்.

கோவிலுக்கு தன் மனைவியைக் கைப்பற்றிச் செல்ல நேர்ந்ததை நினைந்து 'இனி இவ்வுலகில் இருந்தால் இப்பந்தம் [illegible] ஏற்படும். ஆகவே இவளோடு இப்போதே இறைவன் [illegible]யை அடைவேன்' என்று பதிகம் பாடினார்.

[illegible] பதிகம் ''நல்லூர்ப் பெருமணம்'' என்று தொடங்கு [illegible]றொரு பதிகம் அவர் வாழ்க்கையில் முடிவாகச் செய்த [illegible]துவே நமச்சிவாயப் பதிகம்.

இறைவன் ஜோதியை உண்டாக்கியபோது ''இதில் ஈனமாம் [illegible]றவி தீர யாவரும் புகுக'' என்று சொல்லி தான் புகுவதற்கு முன் சம்பந்தர் பாடியது. எனவே நமக்கு சம்பந்தர் அளித்த நல்லாசி மொழியே இப் பதிகம்.

கல்லூர் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர் பெருமணம் பாட்டு மெய்யாத்தில்
சொல்லூர் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர் பெருமணம் மேய நம்பானே.

மணம் செய்துகொண்டு இல்லற வாழ்க்கையை மேற்கொண்டால் நான் இதுவரை பாடிய பாடல்கள் அடியார்களால் மதிக்கப்படாமல் போகும். ஆகவே மணவினையின் பயனாகிய வாழ்க்கை எனக்கு வேண்டாம் என்றார் சம்பந்தர்.

இந்த கோரிக்கைக்கு இணங்கி சிவபெருமான் மாபெரும் ஜோதியை உண்டாக்கி நீயும் உன் காதலியும் மட்டுமின்றி உன் திருமணத்திற்கு வந்தவர் அனைவரும் இஜ்ஜோதி வழியாக என்னிடம் வந்து சேர்க என்றார். அப்போது சம்பந்தர்,

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாம நமசிவாயவே

என்று பாடி ஜோதியில் எல்லாரோடும் கலந்தார். ஞான சம்பந்தர் ஜோதியில் கலந்தது வைகாசி மூல நன்னாள்.)

பெரிய மகான்கள் தன் உடலை விட்டபோது அவர்கள் உடலிலிருந்து ஜோதி வெளிக் கிளம்பும் என்று சொல்வதுண்டு. ரமண மகரிஷி அமரரான அன்று இந்த ஜோதி வெளிப்பட்டதை பலர் பார்த்திருக்கிறார்கள்.

ஆத்ம ஜோதி தரிசனம் கண்டவர்கள் இம்மகான்கள். அத்தகையவர்கள் பரமாத்ம ஜோதியில் கலப்பதில் ஆச்சரியம் ஏதுவும் இல்லை.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

திருமண அழைப்பிதழ்

20—11—2005 ஞாயிற்றுக்கிழமை

மணமக்கள் :—

A. முத்துகணபதி ★ K. பொற்கொடி

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,